அரசியல்

# சூரியன்

புலனாய்வு மாத இதழ்

ARASIYAL SURIYAN

ISO 9001:2015 CERTIFIED MAGAZINE

மலர்:2 / இதழ்:4 / செப்டம்பர் 2023 / தமிழ், ஆங்கில மாத இதழ்/ Volume:2 / Issue:4 / September 2023 / Tamil, English Monthly






தமிழக அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டம் விரிவாக்கம்



போக்குவரத்து துறை ஆணையர். சண்முகசுந்தரம் IAS அதிரடி நடவடிக்கை! அதிர்ச்சியில் RTO அலுவலர்கள்!!



ஒரே நாடு ஒரே தேர்தல் சாத்தியமா? அரசியல் சூரியன் Special ரிப்போர்ட்



இந்தியாவின் கட்டுப்பாட்டில் நிலாவும் சூரியனும்...!



நவீன அறிவிப்புகளால் போக்குவரத்து கழக நஷ்டம் குறையுமா?



சுரண்டும் சுங்கச்சாவடி கட்டணம்

அதிமுக 51-ம் ஆண்டு பொன்விழா மாநாடு... எடப்பாடி புதிய வியூகம்...!

ரூ.15/-

# தமிழக அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டம் விரிவாக்கம்





## திருக்குவளையில் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

தமிழகம் முழுவதும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் விரிவாக்க திட்டத்தை, திருக்குவளையில், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி படித்த பள்ளியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத்து குறைபாட்டை போக்கவும், கற்றல் இடைநிற்றலை தவிர்க்கவும் அரசுப் பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் அமல்படுத்தப்படும் என்று சட்டப்பேரவையில் 110வது விதியின் கீழ் முதல்வர் ஸ்டாலின் கடந்த ஆண்டு மே 7ம் தேதி அறிவித்தார். முதலில் இத்திட்டம், சென்னை மாநகராட்சி பள்ளிகள், தொலைதூர கிராமங்களில் உள்ள பள்ளிகளில் தொடங்கப்படும் என்றும். பின்னர், படிப்படியாக அனைத்து பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் அறிவித்தார்.

அந்த வகையில் முதல் கட்டமாக, சில மாநகராட்சிகள், நகராட்சிகள், தொலைதூர கிராமங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அனைத்து பள்ளி வேலைநாட்களிலும் காலையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அரசாணையும் வெளியிடப்பட்டது. கடந்த 2022 செப்.15ம் தேதி அண்ணா பிறந்தநாளில், மதுரை நெல்பேட்டை ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் காலை உணவு திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

கடந்த மார்ச் 1ம் தேதி இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதையடுத்து, 417 மாநகராட்சி பள்ளிகளில் 43,681 பேர், 163 நகராட்சி பள்ளிகளில் 17,427 பேர், 728 வட்டாரம் மற்றும் கிராம ஊராட்சி பள்ளிகளில் 42,826 பேர், 237 தொலைதூர, மலைப்பிரதேச பள்ளிகளில் 10,161 பேர் என மொத்தம் 1,545 பள்ளிகளில் 1.14 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர். இந்த திட்டத்துக்கு தற்போது ரூ.33.56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த சமூகநலம், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்களை கொண்ட மாநில, மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

16 லட்சம் மாணவர்கள் பயன்: இந்நிலையில், ‘‘மாநிலம் முழுவதும் உள்ள 31,008 அரசுப்பள்ளிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இதன்மூலம் 16 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள். இதற்காக ரூ.404 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது’’ என்று முதல்வர் ஸ்டாலின் கடந்த 15ம் தேதி சுதந்திர தின உரையில் அறிவித்தார்.

அதன்படி, நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி பயின்ற ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் காலை உணவு விரிவாக்க திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்து, பள்ளிக் குழந்தைகளுடன் உணவு சாப்பிட்டார். அப்போது மாணவர்களுடன் முதல்வர் உரையாடினார். கட்சி பேதமின்றி, அனைத்து கட்சி எம்.பி.க்கள், எம்எல்ஏக்களும் இத்திட்டத்தை தொடங்கி வைக்குமாறு முதல்வர் ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்திருந்தார். அதன்படி, மக்கள் பிரதிநிதிகள் தங்கள் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் இத்திட்டத்தை தொடங்கி வைத்தனர். சென்னையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்.

# அரசியல் சூரியன்

**தமிழ் ஆங்கில மாத இதழ்**

*ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்*

**K.மணிகண்டன் B.Com.,**



*இணை ஆசிரியர்*

**சாந்தி மணிகண்டன்**

*கௌரவ அரசியல் ஆலோசகர்*

**பெருஞ்சித்தன் / N.ஈஸ்வரன்**

*கௌரவ ஆசிரியர்*

**முனைவர். மு.வரதராஜ் பெருமாள்**

*உதவி ஆசிரியர்கள்*

M.சையது அலி / S.கார்த்திகேயன்

குளித்தலை A.அலாவுதீன் / M.முனியம் சிவ சண்முகம்

*சிறப்பு ஆசிரியர்கள்*

M.மதன்குமார் / M.கமர்தீன்

A.சுந்தரம் / பிரதீப் சந்திரதாஸ்

R.யுவராஜ் / ஜான் சாமுவேல்

*தலைமை நிருபர்கள்*

T.N.மகேந்திரகுமார் / S.வஜ்ரவேல் /

P.பாலகங்காதரன் / அசோக் B.Com., LLB.,

*சிறப்பு நிருபர்கள்*

ரமேஷ் / N.தியாகு

*கொங்கு மண்டல நிருபர்*

N.அருண் விக்னேஷ்

*மாவட்ட நிருபர்கள்*

M.சரவணன் - ஈரோடு / K.மோகன்ராஜ் - கரூர்

P.ஹரிஹரன் - திண்டுக்கல் / R.பாஸ்கர் - தஞ்சாவூர்

C.குமார் - நாமக்கல் / அம்மையப்பன் - மதுரை

G.சுகுமாறன் - கிருஷ்ணகிரி / K.கனகராஜ் - சேலம்

G.நயினாமுகமது - சிவகங்கை / AGஏழுமலை - கள்ளக்குறிச்சி

R.வீரமணி - திருவாரூர் / M.முனிவேல் - தர்மபுரி

*நிருபர்கள்*

R.கோவிந்தராஜ்
A.R.செந்தில்குமார்
G.ரவிசங்கர்
B.வெங்கடேஷ்
R.தங்கபாண்டியன்
S.சசிகுமார்
Y.சேக் பரீத்
A.நேதாஜி
S.மஜார்
V.S.ஜோசப்
K..ரவீந்திரன், மத்தியசென்னை
V.கனகசபாபதி
Y.ஆம்ஸ்ட்ராங் தென்சென்னை
A.அருண்குமார்
P.ராமகிருஷ்ணன்
S.ரவி

*சட்ட ஆலோசகர்*

ஜெயம் இ.புஷ்பராஜ் B.A.,B.L., / KTV பிரபு B.A., LLB.,

வேல்முருகன் M.A., B.L., / சபரிநாதன் M.A., B.L.,



98/1, Vijayamangalam Road, Hospital Road,
Utthukuli, Tiruppur - 638751. Mobile: 90253 05909
E-mail: arasiyalsuriyan77@gmail.com
webside: www.arasiyalsuriyan.com



**அரசியல் சூரியன் மாத இதழின் அறிவுறுத்தல்**

அரசியல் சூரியன் மாத இதழில் இணைந்துள்ள நிருபர்களோ மற்ற பொறுப்பு வகிப்பவர்களோ, எந்த உள்நோக்கத்துடனும் சுயலாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும் மீறி செயல்படுபவர்கள் நீக்கப்படுவார்கள். மற்றும் சட்டப்படி நடவடிக்கையும் எடுக்கப்படும். -நிர்வாகம்.

*ஆசிரியர் / வெளியீட்டாளர்:* K.மணிகண்டன் B.Com.,

இதழின் அனைத்து வழக்குகளும் சென்னை பெருநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.



**தமிழகத்தில் இருந்து கனிமவளங்கள் திருட்டு: அன்புமணி வலியுறுத்தல்**

→ பக்கம் : 5

**ராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே மீண்டும் படகு சேவை**

→ பக்கம் : 5

**ரேஷன் கடை கேட்டு கிராம மக்கள் கோரிக்கை**

→ பக்கம் : 9

**பாராளுமன்ற தேர்தலில் கூட்டணி வைத்தால் அது தேசிய கட்சியுடன் தான்**

→ பக்கம் : 11

**அண்ணாமலை என்ன செய்து கொண்டிருக்கிறார்? காவிரி விவகாரத்தில் கே.எஸ்.அழகிரி குற்றச்சாட்டு**

→ பக்கம் : 14

**3வது பிரசவத்துக்கு பேறுகால விடுப்பு கேட்க முடியாது: ஐகோர்ட் தீர்ப்பு**

→ பக்கம் : 15

**சென்டர் மீடியனில் மோதி தினமும் விபத்தில் சிக்கும் வாகனங்கள்**

→ பக்கம் : 19

**இறந்த இன்ஸ்பெக்டர் உடலுக்கு 21 குண்டுகள் முழங்க இறுதி மரியாதை**

→ பக்கம் : 27

**மாமல்லபுரம் சிற்பங்கள் பாழாகும் காரணங்கள்...!**

→ பக்கம் : 33

# ஒரே நாடு ஒரே தேர்தலால் அதிமுக பலிகடா ஆகும் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னையில் திமுக நிர்வாகி இல்ல திருமண விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துக் கொண்டார். பின்னர், முதலமைச்சர் ஸ்டாலின் உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது: கழகம் தான் குடும்பம் குடும்பம் தான் கழகம், இதுதான் அண்ணா கண்ட திமுக. யாரின் காலிலும் விழுந்து பதவி பெற வேண்டிய அவசியமில்லை. சட்டமன்ற தேர்தலில் தமிழகத்தை காப்பாற்றியது போல, பாராளுமன்றத் தேர்தலில் இந்தியாவை காப்பாற்ற வேண்டும். திமுக குடும்பமாக செயல்படுவது சிலருக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதைவிட, யார் வரக்கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

இந்தியா கூட்டணியின் 3 கூட்டங்களை பார்த்து பயந்து போய் பாராளுமன்றத்தை பாஜக அரசு கூட்டியுள்ளது. ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற ஒரு சதி திட்டத்தை தீட்டி ஓர் அதிபராக இருக்க முயற்சி செய்கிறார்கள். அதிமுக ஆளுங்கட்சியாக இருக்கும்போது ஒரே நாடு ஒரே தேர்தலை எதிர்த்துவிட்டு தற்போது ஆதரிக்கிறார்கள்.

ஒரே நாடு ஒரே தேர்தலால் அதிமுக பலிகடா ஆகும், அது புரியாமல் ஆதரவு தெரிவித்து வருகிறார்கள். தேர்தல் செலவை குறைக்கிறீர்களோ, இல்லையோ கொள்ளையடிப்பதை குறைத்துக் கொள்ளுங்கள். சட்டசபையில் ஆட்சி கவிழ்ந்தால், அடுத்த பாராளுமன்றதேர்தல் வரும் வரை தேர்தல் நடத்தாமல் காத்திருப்பீர்களா ?

இவ்வாறு அவர் கூறினார்.

# மாஞ்சா நூலுக்கு மேலும் 60 நாட்கள் தடை நீட்டிப்பு: போலீஸ் கமிஷனர் உத்தரவு

மாஞ்சா நூலை பயன்படுத்தி பட்டம் விட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். தடையை மீறி மாஞ்சா நூல் பட்டம் தயாரித்து விற்றவர்கள் கைது செய்யப்பட்டு குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். சென்னையில் மாஞ்சா நூல் பட்டத்தால் தொடர்ச்சியாக மனித உயிரிழப்புகள் ஏற்பட்டன. மேலும் பலர் காயம் அடைந்து உடல் ஊனம் அடைந்தனர்.

இதையடுத்து சென்னையில் மாஞ்சா நூல் பட்டம் தயாரிக்க, பறக்க விட, விற்பனை செய்ய, சேமித்து வைக்க போலீஸ் கமிஷனர் தடை விதித்தார். இதையும் மீறி மாஞ்சா நூலை பயன்படுத்தி பட்டம் விட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். தடையை மீறி மாஞ்சா நூல் பட்டம் தயாரித்து விற்றவர்கள் கைது செய்யப்பட்டு குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த நிலையில் மாஞ்சா நூல் பட்டம் மீதான தடையை மேலும் 60 நாட்களுக்கு நீட்டித்து போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் உத்தரவிட்டுள்ளார்.

மாஞ்சாவுக்கு நேற்று (2ந்தேதி) முதல் அக்டோபர் மாதம் 31ந்தேதி வரை 60 நாட்கள் தடை நீடிக்கப்பட்டுள் ளது. இதை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீஸ் கமிஷனர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.




# தமிழகத்தில் இருந்து கனிமவளங்கள் திருட்டு

## அன்புமணி வலியுறுத்தல்

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தின் மார்த்தாண்டம் முதல் நாகர்கோவில் வரை மலைப்பகுதிகளில் இருந்து கற்கள் வெட்டி எடுக்கப்பட்டு கேரளத்திற்கு கடத்தப்பட்டு வருகின்றன. நெல்லை மாவட்டம் கூடங்குளம், இருக்கன் துறை, வள்ளியூர் உள்ளிட்ட இடங்களிலும் கல் உள்ளிட்ட கனிமவளங்கள் வெட்டி எடுக்கப்பட்டு, சரக்குந்துகள் மூலம் கேரளத்திற்கு கடத்தப்படுகின்றன. அதேபோல், கோவை, திருப்பூர் உள்ளிட்ட மேற்கு மாவட்டங்களில் இருந்தும் ஜல்லிகள், செயற்கை மணல் உள்ளிட்ட கனிமவளங்கள் சரக்குந்துகள்மூலம்கேரளத்திற்குகடத்தப்படுகின்றன. பூமிக்கு அடியில் சக்தி வாய்ந்த குண்டுகளை வைத்து பாறைகள் தகர்க்கப்படுவதால், அப்பகுதியில் உள்ள கட்டிடங்கள் அதிர்கின்றன. தென் மாவட்டங்கள் உட்பட தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் சட்டவிரோத கல் குவாரிகள் அனைத்தையும் அரசு மூட வேண்டும். மாவட்ட எல்லைகளிலும், மாநில எல்லைகளிலும் சோதனைச்சாவடிகளை அமைத்து கனிமவளம் கடத்தப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும்.அதுமட்டுமின்றி,கனிமவளக்கொள்ளைக்கு ஆதரவாக செயல்படும் அதிகாரிகள் அனைவரையும் அடையாளம் கண்டு அவர்கள் மீதும் தமிழக அரசு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே மீண்டும் படகு சேவை



குஜராத்தின் கெவாடியாவில் நடைபெற்ற கடலோர மாநிலங்கள் மேம்பாட்டுக் குழும கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்று பேசினார். அப்போது அவர் கூறியதாவது: தமிழ்நாட்டின் மத்தியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு தேவையான சரக்குகளை கையாளக்கூடிய வகையில், கடலூர் பகுதியில் பெருந்திறன் கொண்ட பசுமை வளத் துறைமுகத்தை உருவக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 10 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளை இந்த துறைமுகம் கையாளும் என எதிர்பார்க்கப்படுகிறது. ராமேஸ்வரம் தலைமன்னார் இடையே படகு சேவையை புதுப்பிப்பதற்கான விரிவான ஆய்வுகள் நடந்து வருகின்றன. 1980ம் ஆண்டு வரை செயல்பாட்டில்இருந்த,இந்தியாஇலங்கைஇடையேயான பாரம்பரிய கடல்வழிகளை புதுப்பிக்கும் வகையில் இத்திட்டம் இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# போக்குவரத்து துறை ஆணையர் சண்முகசுந்தரம் IAS அதிரடி நடவடிக்கை! அதிர்ச்சியில் RTO அலுவலர்கள்!!

ஓட்டுநர் உரிமம், வாகன பதிவு தொடர்பாக சில சேவைகளை இனி ஆன்லைன் மூலமாகவும் பெறலாம் என்று மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் அறிவித்துள்ளது. இதன் மூலம், ஆதார் மூலமாக ஓட்டுநர் உரிமர் புதுப்பித்தல், மாற்று வாகன பதிவு சான்றிதழ் உள்ளிட்ட சேவைகளை ஆர்.டி ஒ அலுவலகத்திற்கு செல்லாமலேயே பெற முடியும் என்றும் ஆன்லைன் மூலம் பெறக்கூடிய 18 வகையான சேவைகள் விவரங்களாக

1. பழகுநர் உரிமம்(எல்எல்ஆர்)
2. ஓட்டுநர் உரிமம் புதுப்பிப்பு(வாகனத்தை இயக்கிக்காட்டுதல் தேவையில்லை என்றால்)
3. டூப்ளிகேட் டிரைவிங் லைசன்ஸ்
4. ஓட்டுநர் உரிமம், ஆர்சி புக்கில் முகவரி மாற்றுதல்
5. சர்வதேச அளவில் ஓட்டுநர் உரிமத்துக்கு அனுமதி
6. வாகன உரிமத்தை ஒப்படைத்தல்
7. வாகனத்துக்குத் தற்காலிகமாகப் பதிவெண் பெற விண்ணப்பித்தல்
8. முழுமையாகக் கட்டமைக்கப்பட்ட வாகனத்துக்கு பதிவெண் பெற விண்ணப்பித்தல்.
9. வாகனத்துக்கு டூப்ளிகேட் பதிவெண் பெற விண்ணப்பித்தல்
10. என்ஓசி சான்றிதழ் பெற விண்ணப்பித்தல்
11. வாகனத்தின் உரிமையாளரை மாற்றுவதற்கு விண்ணப்பித்தல்
12. வாகன ஆர்சி புத்தகத்தில் முகவரியை மாற்றுவது குறித்து விண்ணப்பித்தல்
13. அங்கீகரிக்கப்பட்ட ஓட்டுநர் பயிற்சிப்பள்ளியில் பயிற்சி பெற விண்ணப்பம் பதிவு செய்தல்
14. உயர்அதிகாரிகளுக்குவாகனத்தைப்பயன்படுத்தப் பதிவு செய்ய விண்ணப்பித்தல்
15. வாகனத்தை வாடகைக்கு எடுப்பது தொடர்பான ஒப்பந்தத்தைப் பதிவு செய்தல்
16. வாகனத்தை வாடகைக்கு எடுத்த காலம் முடிந்தபின் ஒப்பந்தத்தை ரத்து செய்தல்
17. வாகனத்தின் உரிமத்தை மாற்றுவது குறித்து விண்ணப்பித்தல்
18. தூதரக அதிகாரிகள் பயன்படுத்தும் வாகனங்களுக்கு புதிய வாகன பதிவெண் பெற விண்ணப்பித்தல் போன்ற சேவைகளை ஆன்லைன் மூலமாக பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆன்லைன் அடிப்படையிலான சேவைகளை 100% பெறுவதற்கு பொதுமக்கள் வைத்திருக்கும் தரவுகள் 100% சரியான தரவுகளாக இருந்தால் மட்டுமே மேற்படி ஆன்லைன் சேவைகளை தங்கு தடை இன்றி ஒரு நபர் பெற முடியும் என்பது யாவரும் அறிந்த ஒன்று.



புதியதாக பொருப்பேற்றுள்ள போக்குவரத்துறை ஆணையர் திரு.சண்முகசுந்தரம் IAS அவர்களின் மேற்கண்ட அதிரடி உத்தரவாலும், நேரடி ஆய்வாலும் போக்குவரத்துறை அலுவலகங்கள் ஆட்டம் கண்டுள்ளது.31சேவைகளை பொதுமக்கள் ஆன்லைனில் எந்த ஒரு சிரமம் இல்லாமல் அரசுக்கு பணம்கட்டி இடைத்தரகர் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவு பிறப்பித்துள்ளார்

இந்த31சேவைகளை ஆதார் அட்டையில் 100% சரியாக இருந்தால் மட்டுமே பொதுமக்கள் பயனுறமுடியும். இல்லையென்றால் போக்குவரத்து அலுவலகத்திற்க்கு சென்று usar id பெற்று பொதுமக்கள் சேவைகளை பெறலாம். ஒரேநாடு, ஒரேபோக்குவரத்துதுறை, ஒரே சர்வர் என்ற நடைமுறையில் வெர்ஷன்4 இன்னும் முறையாக அனைத்து மாநிலங்களும் பின்பற்றாத போது தமிழக அரசுமட்டும் பின்பற்றுவது ஏன்? பழைய பதிவு புத்தகங்கள் ஆன்லைனில் இன்னும் பதிவேற்றலாம். வெற்று அறிவிப்பால் மட்டுமே

பொதுமக்கள் சேவைகளை மட்டும் எப்படி பெறமுடியும். இந்த குறைகளுக்கு யார் பொறுப்பேற்பது.

அனைத்து ஆவணங்களும் சரியாக இருந்தும் தமிழகம் முழுவதும் இடைத்தரகர் அல்லாமல் எந்த வேலையும் நடைபெறாது என்பது உண்மை ஊரறிந்த உண்மை. ஆனால், குறைந்தபட்சம் மனச்சான்று இல்லாமல் இலஞ்சம் அளவுக்கு அதிகமாக பெறுகின்ற ஆர். டி. ஓ. அலுவலர்களை தனது மெயில் ஐடிக்கு அன்றாட பணிகளை அனுப்ப சொல்லும் ஆணையர் இடைத்தரகர்கள் மூலம் அலுவலர்கள் மறைமுகமாக பணம்பெற்று சேவைகளை வழங்குவது எவ்வாறு தடுக்கப் போகிறார்?

அலுவலர்கள், எழுத்தர் முதல் ஆர். டி. ஓ. வரை போக்குவரத்து சங்கங்கள் மூலம் நேரடியாக மனுகொடுத்தும் அமைச்சர் மற்றும் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றும் இப்பிரச்சனைகள்இரண்டுமாதங்களாகதீர்க்கபடாதது ஏன்?

வெளியில் ஆன்லைன் அறிவிப்பை மட்டும் செய்துவிட்டு பொதுமக்கள் நேரடியாக சென்றால் மட்டுமே சேவைகள் செய்து தரப்படும் என்ற உத்தரவு யாருக்காக? ஆணையரின் நோக்கம் என்ன? இந்த உத்தரவால்பாதிப்படைந்துபொதுமக்கள்தான்என்பதை ஆணையர் அறிவாரா? எத்தனை அலுவலர்கள் இவரின் நேரடி ஆய்வால் குற்றம் கண்டுபிடித்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்?

ஆணையரின்செயல்பாடுகளைஉற்றுநோக்கும்போது அலுவலர்களை மறைமுகமாக மிரட்டும் நோக்கத்துடனும், இலஞ்சம் அதிகமாக பெற்று தருமாறு நெருக்கடி செய்கிறார்என்பதைகூறாமல்கூறுவதாகவே தெரிகிறது.

அனைத்து வரிகளையும் செலுத்திய பிறகே இலக்கம் பதிவு செய்து வாகனங்கள் நடைமுறைக்கு வருகிறது. ஏற்கனவேடீசல்விலைமற்றும்டோல்வரிசலைவரிகளின் மூலம்அனைத்துபொருள்களின்விலைஉயர்ந்துள்ளது. இதை யாரும் மறுக்கமுடியாது. ஆன்லைன் சேவை என்பது சேவைகளை எளிதாக பெறுவதுதான். ஆணையரின் நடவடிக்கையால் மேலும் பொதுமக்கள் துன்பத்திற்கு ஆளாகின்றனர். தமிழக அரசு இப்பிரச்சனையை இன்னும் எளிமையாக்கும் என்று நம்புவோம்?

அனைத்து அலுவலகங்களிலும் எழுத்தர் முதல் மோட்டார்வாகனஆய்வாளர்கள்வரைபற்றாக்குறையாக இருக்கும்போது சேவைகளை மட்டும் பெறுவது எப்படி? டெப்டேசன் போடுவதற்குகூட ஆள் இல்லை. துறையில் உள்ள காலி பணி இடங்களை அரசு எப்போது நிரப்பும்?



திருச்சி RTO அலுவலகம் முற்றுகை.

சாமானியர்களின் அலைச்சல்களையும், மன உளைச்சல்களையும் குறைப்பது எவ்வாறு? எளிமையாக்குகிறேன் பேர்வழி என்று சொல்லி மேலும் சுமைகளை சுமத்துவது போல் இருக்கிறது.

நடைமுறையில் அரசு தரப்பில் சர்வர் குறைபாடு முதல் கொண்டு ஊழியர் பற்றாக்குறை வரை ஏகப்பட்ட குறைகளை வைத்துக்கொண்டு ஆர்டிஓ அலுவலகமே செல்ல வேண்டாம். வீட்டில் இருந்து கொண்டு ஆன்லைனிலேயே எல்லா சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம் என கண்ணை மூடிக்கொண்டு ஒரு உயர் அதிகாரி அறிவிப்பது எந்த அளவுக்கு சாத்தியப்படும் என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாகவே உள்ளது.

மேற்கூறிய அனைத்து சேவைகளுக்குமே பணம் வாங்கியே பழக்கப்பட்டு போன அரசு ஊழியர்கள் பொதுமக்களுக்கான இந்த சேவையை எந்த அளவிற்கு மனப்பூர்வமாகவும், விரைவாகவும்., தடையின்றியும் நிறைவேற்றி வைப்பார்கள் என்பது பொதுமக்களுடைய எழுந்துள்ள கேள்வி.

ஐடி அதிகாரிகளும், லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகளும் நினைத்தால் படையெடுக்கும் அலுவலகங்களில் ஒன்று ஆர்.டி.ஓ. அலுவலகமும் கூட. இதனாலேயே பொதுமக்களின் அதிருப்திக்கு ஆளான ஒரு துறையாக கூட இந்த அலுவலகங்கள் இருப்பதுண்டு.

அரசின் சமீபத்திய இந்த ஆன்லைன் அறிவிப்பு மேற்சொன்ன இந்த குறையை போக்குவதற்காக கூட அறிவித்திருக்கலாம் என திருவாளர் பொதுஜனம் எண்ணக்கூடும்.

ஆனாலும், இந்த ஆன்லைன் சேவைகள் மட்டும் இன்றி போக்குவரத்து துறை விதி மீறல்கள் சமூகத்தில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதும் இதற்கு அரசு அதிகாரிகள் மட்டும் காரணம் இல்லை பொதுமக்களுக்கும் மிகுந்த பொறுப்பு உண்டு என்பதை நாம் உணர்ந்து போக்குவரத்து விதிகளை முடிந்தவரை பின்பற்றவேண்டும்என்பதேநமதுவேண்டுகோளாகும்..

பொது மக்களாகிய நாம் மோட்டார் வாகன சட்டத்தை

கண்டபடி விமர்சிக்காமல், முக்கியமாக மோடி அரசு, காங்கிரஸ் அரசு என்று பார்க்காமல் அதன் தேவையை, பயனை உணர்ந்து செயல்பட வேண்டிய கட்டாயம் நமக்கு உள்ளது.

சிலதிட்டங்களைமத்திய அரசுகொண்டுவரும்போது, அதனை ஆராய்ந்து மாநில அரசு முடிவு எடுக்க வேண்டும்.

நாம் ஒன்றை தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டியது கட்டாயம்.

1. தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் வாகன விதி மீறல்கள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. அதனால் விபத்துகள் பல நடக்கின்றன.

ஹெல்மெட் அணியாத காரணத்தால் தலையில் அடிப்பட்டு இறக்கும் இளைஞர்களை பார்க்கும்போது, அரசு மற்றும் போக்குவரத்து போலீசின் மெத்தனமும், பெற்றோர்களின்கண்டிப்புஇல்லாமையுமேகண்முன்னே குற்றமாய் தெரிகிறது. ஆனாலும் முதல் குற்றவாளி விதியை மீறிய அந்த வாகன ஓட்டி தான் என்பதில் மாற்று கருத்து இல்லை.

2. சமீபமாக தமிழ்நாட்டில் எதிர் திசையில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இதனால் நிறைய விபத்துக்கள் நேர்கிறது. இதில் சோகம் என்னவென்றால் எதிர் திசையில் பயணிக்கும் மூடர்களால் நேர்திசையில் வரும் வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்குகிறார்கள்.

## கூடுதல் பெட்டிகளுடன் குருவாயூர் ரெயில் இயக்கம் தெற்கு ரெயில்வே அறிவிப்பு

ரெயில் மொத்தம் 22 பெட்டிகளுடன் இயக்கப்படும். 2ம் வகுப்பு பெட்டி ஆகியவை கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளது. தெற்கு ரெ யில்வே வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:

சென்னை எழும்பூர்குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (1612716128) இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் ஒரு படுக்கை வசதி கொண்ட பெட்டி, ஒரு பொது 2ம் வகுப்பு பெட்டி ஆகியவை கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளது. இந்த ரெயில் மொத்தம் 22 பெட்டிகளுடன் இயக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

3. விதி மீறலில் ஈடுபட்டதை நியாயப்படுத்த ரோடு சரிஇல்லை,போலீஸ்துரத்தினர்,லஞ்சம்வாங்குகின்றனர், மிரட்டுகின்றனர் என்றெல்லாம் சால்ஜாப்பு செய்கிறார்கள். இது ஓர் தவறான சமூகத்தை உருவாக்கியதாக தான் பார்க்கப்பட வேண்டும்.

4. டி டி எப் வாசன் போன்றோரை ஏதோ தங்கள் தலைவன் போல பார்க்கும் மனப்பாங்கும், தவறான சமூகம்உருவாகிவிட்டதையேஉணர்த்துகிறது.இவரை போன்ற சட்டத்தை மீறும் பிரபலங்கள் தண்டிக்கப்படவேண்டும்.

5. வாகனம் ஓட்டுதல் என்பது பயணிக்க மட்டுமே தவிர, உயிரை பணயம் வைக்க இல்லை.

பிற மாநிலங்களில் நாம் காண்பவை:

1. பெங்களூருவில் சிக்னலை பொறுப்பாக கடைபிடித்தாக வேண்டும். அதாவது மஞ்சள் வண்ணம் வரும்போதே வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும். மீறும் வாகனங்களை போலீசார் நிறுத்தி பைன் போடுகின்றனர்.

2.கேரளாவில்90கி.மீ.மேல்வாகனத்தைஇயக்கினால் விதிமீறல்.

3. தமிழகம் தவிர்த்து மூன்று மாநிலங்களிலும் நம்மை விட எதிர் திசையில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை மிக மிக குறைவு.

கீழே உள்ள தகவலின்படி, தமிழ் நாட்டில் சென்ற ஆண்டு மட்டும் 16,685 பேர் சாலை விபத்தில் இறந்திருக்கின்றனர்.

தமிழகம் நிச்சயம் போக்குவரத்து போலீசின் கண்டிப்பும், வாகன ஓட்டிகளின் ஒத்துழைப்பும் உடனடியாக தேவைப்படும் மாநிலம் சிறிதும் ஐயமில்லை.

போக்குவரத்து அலுவலகங்களால் தீர்க்கப்பட வேண்டிய பணிகள் இவ்வளவு இருக்கும்நிலையில்

பொதுவாக தமிழக முழுவதும் போக்குவரத்து ஆர்டிஓ வெளியில் வருகிறார் என்றால் அது கலெக்ஷனுக்காக மட்டுமே என்று பொதுமக்கள் வெளிப்படையாக விமர்சிக்கும் அளவுக்கு போக்குவரத்து துறை அலுவலகங்கள் லஞ்சத்தில் புரையோடிக் கிடக்கின்றன.

இந்நிலையில் போக்குவரத்து ஆணையரின் எந்த புதிய அதிரடி அறிவிப்பால் மாறப்போவது மக்களா? ஆணையரா? அலுவலர்களா? மாற்றம் என்ற சொல்லைத்தவிர அனைத்தும் மாறக்கூடியதே. பொறுத்திருந்து பார்ப்போம். உங்களுக்காக.

**உங்களில் ஒருவன்..**

**சிறப்பு செய்தியாளர் கு.மோகன்ராஜ்**

**கரூர்**



# கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் இம்மாதம் 2வது வாரம் திறப்பு

வண்டலூர் அடுத்துள்ள கிளாம்பாக்கத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது. சென்னையின் போக்குவரத்து நெரிசலை குறைக்க இந்த பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

வண்டலூரில் இருந்து 1.5 கிலோமீட்டர் தூரத்திலும், ஊரப்பாக்கம் ரெயில் நிலையத்தில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவிலும் இந்த பஸ் நிலையம் அமைந்துள்ளது. கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் கட்டும் பணி 2019, பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டது. சுமார் 88 ஏக்கர் நிலத்தில் ரூ.400 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இந்த பேருந்து நிலையத்தில் 2,000 பேருந்துகள் வரை வந்து செல்லும் வகையிலும், 270 கார்கள், 3,500 இருசக்கர வாகனங்களை நிறுத்தும் வகையிலும் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னையின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் மாநகரப் பேருந்துகள் கிளாம்பாக்கம் புதிய பேருந்து நிலையத்துக்கு வந்து செல்லும் வகையில் தனி இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் தற்போது 99 சதவீத பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் செப்டம்பர் 2வது வாரத்தில் திறக்கதிட்டமிட்டிருப்பதாகதகவல்வெளியாகியுள்ளது.

# ரேஷன் கடை கேட்டு கிராம மக்கள் கோரிக்கை

வாலாஜாபாத் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மின்னழுத்த குறைபாடு காரணமாக மின்சாதன பொருட்கள் பழுதடைவதாகவும் அதனால் புதிதாக டிரான்ஸ்பார்மர் அமைத்து தர வேண்டும் என்று கிராம மக்கள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் வாலாஜாபாத் ஒன்றியத்திற்கு உட்பட்ட அய்யம்பேட்டை, திம்மையன்பேட்டை, ஏகனாம்பேட்டை, பூசிவாக்கம், வெண்குடி என 5 கிராமங்களில் ரூ.40 லட்சம் செலவில் புதிய டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்பட்டு அதற்கான தொடக்க விழா நடைபெற்றது. வாலாஜாபாத் ஒன்றிய குழு தலைவர் ஆர்.கே. தேவேந்திரன் தலைமையில் நடைபெற்றவிழாவில்உத்திரமேரூர்தொகுதிஎம்.எல்.ஏ. க.சுந்தர் கலந்துகொண்டு புதிய டிரான்ஸ்பார்மர்களை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கி வைத்தார். பின்னர் அவர் ஏகனாம்பேட்டை கிராமத்திற்கு உட்பட்ட புதுப்பேட்டை பகுதிக்கு வந்தபோது கிராம மக்கள் திரண்டு வந்து எம்.எல்.ஏ.வை முற்றுகையிட்டு தங்கள் பகுதியில் ரேஷன் கடை அமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இது குறித்து தற்போது தான் தனக்கு தெரிய வருகிறது. அதனால் உடனடியாக புதிய ரேஷன்கடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று எம்.எல்.ஏ. உறுதி அளித்தார். அதன் பேரில் முற்றுகையிட்ட கிராம மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இதில் ஒன்றிய குழு துணை தலைவர் பி.சேகர், ஒன்றிய கவுன்சிலர் எழிலரசி சுந்தரமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர் பூசிவாக்கம் லெனின்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கோவையில் தயாராகும் புதிய வடிவிலான விநாயகர் சிலைகள்

**கோ**வை மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சுண்டக்காமுத்தூர், செல்வபுரம், தெலுங்குபாளையம், புட்டுவிக்கி சாலை, கவுண்டம்பாளையம்உள்ளிட்டபகுதிகளில்பிள்ளையார் சிலைகள் தயாரிப்பு பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது.

அங்கு சனீஸ்வரருடன் அமர்ந்திருக்கும் பிள்ளையார், விவசாய விநாயகர், கடல்கன்னி உருவத்தில் அருள்பாலிக்கும் பிள்ளையார், சிங்க வாகனங்களில் எழுந்தருளிய விநாயகர். முருகன் புல்லட் ஓட்ட பின்சீட்டில் பயணிக்கும் பிள்ளையார், ராஜகணபதி, டிராகனில் வீற்றிருக்கும் விநாயகர், மயில் மீது அமர்ந்த பிள்ளையார், சிவன் சிலையை ஏந்தி நிற்கும் பாகுபலி விநாயகர் என்று பல்வேறு வடிவங்களில் சிலைகள் வடிக்கப்பட்டு வருகின்றன.

கோவையில் விநாயகர் சிலைகளை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டு வரும் கலைஞர்கள் கூறுகையில்,

நாங்கள் வீடுகளில் வைத்து வழிபடுவதற்காக களிமண் சிலைகளையும், பொதுஇடத்தில் வைப்பதற்காக பிரமாண்ட வடிவில் சிலைகளையும் தயாரித்து வருகிறோம். நாங்கள் வடிவமைக்கும் விநாயகர் சிலைகள் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் இருக்கும்.

அதாவது தண்ணீரில் எளிதாக கரையும் கிழங்கு மாவு, ஓடக்கல் மாவு, பேப்பர் கூழ் ஆகியவற்றை பயன்படுத்தி சிலைகள் தயார் செய்யப்படுகின்றன. சிலையின் தாங்கு திறனை உறுதி செய்வதற்காக உட்புறத்தில் சவுக்கு கட்டைகளை பயன்படுத்தி உள்ளோம்.

அப்படி தயாராகும் சிலைகளை 2, 3 நாட்கள் காயவைத்து, அதன்பிறகு சிமெண்ட் பேப்பர் ஒட்டி, அதில் வாட்டர் கலர் மூலம் பெயிண்ட் அடித்து சிலைகள் செய்கிறோம். அவற்றில் செயற்கை ரசாயனங்கள் மற்றும் எனாமல் கலப்பது இல்லை. எங்களிடம் 2 அடி முதல் 10 அடி உயரம் வரை பிள்ளையார் சிலைகள் விற்பனைக்காக தயார்நிலையில் உள்ளன. தமிழகம் முழுவதிலும் விநாயகர் சிலைகள் செய்வதற்கான மூலப்பொருட்களின் விலை கணிசமாக உயர்ந்து உள்ளது. எனவே பிள்ளையார் சிலைகளின் விலையும் தற்போது சிறிய அளவில் உயர்த்தப்பட்டு உள்ளது. அதன்படி சிறிய அளவிலான சிலைகள் ரூ.200 முதல் ரூ.2 ஆயிரம் வரையும், 10 அடி உயரம் உடைய சிலைகள் ரூ. 10 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரையும் விற்கப்பட்டு வருகிறது.

கோவையில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கடந்த மே மாதம் முதலே பணிகளை தொடங்கி விட்டோம். எங்களுக்கு கோவை மட்டுமின்றி திருப்பூர், ஈரோடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் இருந்தும் ஆர்டர்கள் வந்து குவிந்து உள்ளன என தெரிவித்தனர்.

கோவை மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பல்வேறு வடிவங்களில் பிள்ளையார் சிலைகள்வடிவமைக்கப்பட்டுவருவதுபொதுமக்களிடம் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



# பாராளுமன்ற தேர்தலில் கூட்டணி வைத்தால் அது தேசிய கட்சியுடன் தான்

## தினகரன் பேட்டி

தஞ்சையில் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

மதுரையில் எடப்பாடி பழனிச்சாமி நடத்தியது எழுச்சி மாநாடு அல்ல. இது பழனிச்சாமியின் வீழ்ச்சி மாநாடு. மாநாட்டில் 20 லட்சம் பேர் கலந்து கொள்ளவில்லை. அதிகபட்சமாக 2 முதல் 2.5 லட்சம் பேர் தான் பங்கேற்று இருப்பார்கள்.

இந்த தகவலை மாநாட்டுக்கு சென்றவர்கள், ஏன்? எடப்பாடி பழனிச்சாமி நண்பர்கள் என்னிடம் கூறினர். கடந்த ஆட்சியில் மு.க.ஸ்டாலின் எந்த திட்டத்திற்கு எதிரெல்லாம் போராட்டம் நடத்தினாரோ தற்போது அவர் முதலமைச்சராக இருந்து அந்த எதிர்ப்பு திட்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்கிறார். மு.க.ஸ்டாலினுக்கும், எடப்பாடி பழனிச்சாமிக்கும் எந்த வேறுபாடும் இல்லை. தி.மு.க, அ.தி.மு.க.வுக்கு மாற்று அ.ம.மு.க. தான்.

தமிழகத்தில் நீட் தேர்வு வேண்டாம் என்று பல மாணவர்கள், பெற்றோர்கள் கூறி வருகின்றனர். எனவே இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பா.ஜ.க.வுடன் எனக்கு எப்போதுமே உறவு இருந்தது கிடையாது. நண்பர்கள் இருக்கிறார்கள் அவ்வளவு தான்.

வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் கூட்டணி இல்லை என்றாலும் நாங்கள் தனித்து போட்டியிட தயாராக இருக்கிறோம். ஒருவேளை கூட்டணி என்று இருந்தால்



அது தேசிய கட்சியுடன் தான் இருக்கும். தனித்து இருந்தால் நாங்கள் தான் தலைமை. சுப்ரீம் கோர்ட், காவிரி ஆணையத்தின் தீர்ப்பையே மதிக்காமல் தமிழகத்திற்கு தண்ணீர் தர மாட்டோம் என கர்நாடக அரசு கூறி வருகிறது.

இதனால் டெல்டா மாவட்டங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே தமிழக முதலமைச்சர் உடனடியாகமத்தியஅரசுடன்இணைந்துதமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய தண்ணீரை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஓ. பன்னீர்செல்வமும், தானும் இணைந்து செயல்பட வேண்டும் என முடிவெடுத்து இருக்கிறோம். வருங்காலத்தில் அதற்கான திட்டங்கள் வகுக்கப்படும். சி.ஏ.ஜி அறிக்கையின் படி மத்திய பா.ஜ.க. ஆட்சியில் ஊழல் நடந்திருந்தால் அதற்கு எதிராக மக்கள் தீர்ப்பளிப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.



# மதுரையில் நடந்த அதிமுக 51-ம் ஆண்டு பொன்விழா...!

## எடப்பாடி புதிய வியூகம்...!

மதுரையில் சமீபத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் பொன்விழா மாநாடு நடத்தப்பட்டது. இதில் பேசிய எடப்பாடி பழனிசாமி ஆளும் திமுகவை குறிவைத்து சரமாரியாக குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

நீட் தேர்வு, டாஸ்மாக் கொள்ளை, கச்சத்தீவு தாரை வார்ப்பு, மீத்தேன் திட்டம் என்பன போன்ற பல பிரச்னைகளில் திமுக மீது அவர் புகார்ப் பட்டியல் வாசித்தார்.

அதிமுக தொடங்கப்பட்டு 50 ஆண்டுகளை நிறைவு செய்து 51வது ஆண்டில் அடியெடுத்து வைத்ததை கொண்டாடும் வகையில் மதுரை விமான நிலையம் அருகே நடைபெற்ற இந்த “பொன்விழா எழுச்சி மாநாட்”டில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு புரட்சித் தமிழன் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

மாநாட்டில்பங்கேற்கும்அதிமுகதொண்டர்களுக்கான உணவு தயாரிக்கும் பணிகள் மாநாட்டுக்கு முந்தைய நாள் இரவு முதலே தொடங்கி மும்முரமாக நடைபெற்று வந்தது. மாநாடு நடைபெற்ற திடலில் இரு புறத்திலும் உணவுகள் தயாரிக்கப்பட்டன. அங்கு தயாரிக்கப்பட்ட உணவுகள் சுவையாக இல்லாததாலும், உணவு வேகாததாலும், தொண்டர்கள் இந்த உணவை சாப்பிடாமல் சென்றதால் டன் கணக்கில் உணவு வீணாக கொட்டப்பட்டுள்ளது.

மாநாடு முடிந்த நிலையில் மாநாட்டு பந்தலில் அண்டா, அண்டாவாக டன் கணக்கில் தொண்டர்களுக்காக தயார் செய்த புளியோதரை உணவுகள் கொட்டப்பட்டு கிடந்த காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவின. உணவுகளை இப்படி பொறுப்பு இல்லாமல் மாநாட்டு சமையல் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே கொட்டிச் சென்றது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மாநாட்டின் நிறைவாக பேசிய எடப்பாடி பழனிசாமி, வழக்கம் போல் திமுக மீது குற்றச்சாட்டுகளை அடுக்கினார். அத்துடன் தமது ஆட்சிக் காலத்தில் செய்த மக்கள் நலத் திட்டங்களைவும் அவர் எடுத்துக் கூறினார். ஆனால் எந்தவொரு இடத்திலும் மத்திய அரசையோ, பா.ஜ.க.வையோ அல்லது தன்னுடன் முரண்பட்டு, அதிமுகவுக்கு உரிமை கோரும் பன்னீர்செல்வம், சசிகலா, டி.டி.டி.தினகரன் ஆகியோரையோ அவர் விமர்சிக்கவே இல்லை. கட்சியை முழுமையாக கைப்பற்றிவிட்ட அவர், எதிர் தரப்பினர் குறித்து ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

மதுரை அதிமுக மாநாடு

எடப்பாடி பழனிசாமி பேச்சில்

அவர் முதல்வராக இருந்தபோது “எங்களின் விவசாய நிலத்தை மீத்தேன் திட்டத்திற்காக பறிக்க பார்க்கிறார்கள்” என்ற கோரிக்கை வைத்த விவசா யிகளின் நல்வாழ்வுக்காக, ஒரு விவசாயி என்கிற அடிப்படையில் அவர்களின் கஷ்டங்களை உணர்ந்து, மத்திய அரசாங்கத்தோடு பேசி தஞ்சை மாவட்டத்தை பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டலமாக அறிவிக்க வழிசெய்தாக குறிப்பிட்ட அவர் மேலும் பேசுகையில்,

தென் மாவட்ட மக்கள் பயன்பெறும் வண்ணமாக 5 மாவட்டங்கள்மக்கள்பயன்பெறவேண்டும்என்பதற்காக

உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி முல்லைப்பெரியார் அணையின் நீர்மட்டத்தை முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உயர்த்தி காட்டினார். முல்லைப் பெரியார் அணையின் நீர்மட்டத்தை உயர்த்த மீண்டும் நாம் முயற்சித்தோம். ஆனால் மத்திய அரசு அதை கிடப்பில் போட்டு விட்டது.

மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப 6 மாவட்டங்களை புதிதாக உருவாக்கி தந்தோம். பயிர் கடனை ரத்து செய்தோம். மீனவர்களுக்கு பல்வேறு திட்டங்களை தந்தோம்.

அம்மா கிளினிக் பொதுமக்களின் சேவைக்காக உருவாக்கினோம். ஆனால், அதை விடியா திமுக அரசு மூடிவிட்டது.

முதலமைச்சர் ஸ்டாலின் இராமேஸ்வரத்திற்கு வருகை தந்தார். கச்சத்தீவை மீட்போம் என்று பச்சை பொய் பேசி வருகிறார். அதை தாரை வார்த்து கொடுத்தது திமுகவே.

நீட் எதிர்ப்புப் போராட்டம் என்பது ஏமாற்று வேலை. சட்டமன்றத் தேர்தலில் நின்ற போது முதலமைச்சர் மு.க ஸ்டாலின் முதல் கையெழுத்து நீட் தேர்வு ரத்து என்று சொன்னார். ஆனால் இதுவரை என்ன முயற்சி செய்தார்.

நீட் தேர்வு விவகாரத்தில் திமுக மிகப்பெரிய நாடகம் நடத்தி வருகிறது. 2010ம் ஆண்டு டிசம்பர் 21ம் தேதி மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி இருந்த போதுதான் நீட் தேர்வு வந்தது. அதை யாராலும் மறுக்க முடியாது. ஆகவே காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியில் நீட் தேர்வு கொண்டு வரப்பட்டது. அதற்கு உடந்தையாக இருந்தது திமுக ஆட்சி.

திமுக முன்னாள் அமைச்சர்கள் நீதிமன்றம் சென்று ஊழல் வழக்கு சம்பந்தப்பட்ட வழக்குகளில் வெற்றி கண்டுள்ளனர். நாங்கள் விட மாட்டோம் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் உச்ச நீதிமன்ற வரை செல்வோம் எனவும் குறிப்பிட்டார்.

இது தவிர டாஸ்மாக்கில் மிகப்பெரிய கொள்ளை நடைபெற்று வருகிறது. ஒரு பாட்டிலுக்கு 10 ரூபாய் கூடுதலாக விற்கப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு கோடி பாட்டில் விற்கப்படுகிறது. ஒரு நாளைக்கு பத்து கோடி வருமானம் பெறுகிறது திமுக அரசாங்கம்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு அடியோடு சீரழிந்து விட்டது. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, திருட்டு என நடைபெற்று வருகிறது.

அதிமுக என்னும் மாபெரும் இயக்கத்தை யாராலும் தொட்டுப் பார்க்க முடியாது. ஸ்டாலின் அவர்களே!



உங்கள் கட்சியை நீங்கள் காப்பாற்றிக் கொள்ளுங்கள் என எச்சரிக்கையும் விடுத்தார்.

மாநாட்டு கூட்டத்தில் தனது முன்னாள் சகாக்களான ஓ. பன்னீர்செல்வம், சசிகலா, தினகரன் ஆகியோரைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசாமல் நாசுக்காக தவிர்த்ததை அவருடைய அரசியல் முதிர்ச்சியா? இல்லை அவர்களை நிஜமாகவே புறக்கணிக்கும் நோக்கத்துடன் தவிர்த்தாரா? அல்லது எதிர்காலத்தில் எவரும் உதவுவார்கள் என்ற எச்சரிக்கையான உள்ளுணர்வின் உறுத்தலா?

அதேபோல் மத்தியில் ஆளும் பாஜகவை விமர்சித்தும் அவர் எதுவும் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சட்டமன்ற எம்எல்ஏக்களின் எண்ணிக்கை அடிப்படையில் அதிமுக எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்களின் முன்னிலையில் உண்மையான எதிர்க்கட்சிகளாக நாங்கள் தான் விளங்குகிறோம் என பாஜகவின் தமிழக தலைவர்கள் அவ்வப்போது ஊடகங்களிலும் பத்திரிக்கை உட்பட போட்டிகளிலும் குறிப்பிடுகிறார்கள்.

இதற்கு தகுந்த விளக்கத்தையும் பதிலையும் தரவேண்டிய தார்மீக கடமை அதிமுக பொதுசெயலாளர் என்ற முறையில் எடப்பாடி பழனிசாமிக்கு உண்டு. இதையும் இந்த பொன்விழா ஆண்டு மாநாட்டில் தெளிவுபடுத்துவார் என அவருடைய கட்சிக்காரர்களே எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆனால் பாஜகவை பற்றியும் அவர் விமர்சிக்காமல் தவிர்த்தது எதிர்கால கூட்டணிக்கான சமிக்ஞையா? தமிழக பாஜக தலைவர்களுக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டுமா என்ற ஏளனத்தின் வெளிப்பாடா? இல்லை பாஜகவை பொறுத்த வரையில் நாம் எதை வேண்டுமானாலும் டெல்லியில் பேசி பெற்றுக் கொள்ளலாம் என்ற இறுமாப்பின் வெளிப்பாடா?

இது அரசியல் நோக்கர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகம். காலம் சிறந்த பதிலைச் சொல்லும். காத்திருப்போம்...

# அண்ணாமலை என்ன செய்து கொண்டிருக்கிறார்?

## காவிரி விவகாரத்தில் கே.எஸ்.அழகிரி குற்றச்சாட்டு

தமிழகத்துக்கு கர்நாடக அரசு தர வேண்டிய காவிரி தண்ணீரை தர மறுக்கிறது.

இது தொடர்பாக தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ்.அழகிரி கூறியதாவது:

தமிழகத்தில் ஆளும் தி.மு.க. அரசை பா.ஜனதா எப்படி குறை சொல்கிறதோ அதே போல் கர்நாடகத்தில் ஆளும் காங்கிரஸ் அரசை அங்குள்ள பா.ஜனதா குறை சொல்கிறது. அவர்களுக்கு காவிரி முக்கியமல்ல. அரசியல் தான் முக்கியம். காவிரியில் தண்ணீர் திறக்க கர்நாடக அரசு முன் வந்ததும் முதலில் எதிர்ப்பு தெரிவித்தது பொம்மை.

அடுத்ததாக எடியூரப்பா. 3வதாக குமாரசாமி. ஆரம்பத்தில் தண்ணீர் திறக்க முடியாத சூழலில் இருக்கிறோம் என்று துணை முதல்மந்திரி சிவகுமார் கூறியதும் காங்கிரசாக இருந்தாலும் முதலில் கண்டனம் தெரிவித்தது தமிழக காங்கிரஸ்.

மேலும் இந்த விஷயத்தில் தமிழக அரசுக்கு துணை நிற்போம் என்ற அறிவித்தோம். ஆனால் இப்போது அங்குள்ள பா.ஜனதா தலைவர்கள் எதிர்ப்பதை தமிழக பா.ஜனதா கண்டிக்க வில்லை.

இந்த நிமிடம் வரை கண்டித்து ஒரு வார்த்தை கூட



அண்ணாமலை கே.எஸ்.அழகிரி

அண்ணாமலை பேசவில்லை. கடந்த முறை பா.ஜனதா ஆட்சியின் போது தான் மேகதாதுவில் அணை கட்ட ரூ.1000 கோடி ஒதுக்கினார்கள். வரைவு திட்டத்துக்கான ஒப்புதலையும் மத்திய அரசு வழங்கியது.

இப்போதும் காவிரியில் தண்ணீர் திறந்து விடக் கூடாது என்பதில் அந்த அரசு உறுதியாக இல்லை. ஆனால் தயங்குகிறது. இந்த தயக்கத்துக்கு காரணம் பா.ஜனதாவின் எதிர்ப்பு தான். பா.ஜனதா காவிரியை மையமாக வைத்து அரசியல் செய்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# 3வது பிரசவத்துக்கு பேறுகால விடுப்பு கேட்க முடியாது



## அரசு உத்தரவு சரிதான் என்று ஐகோர்ட் தீர்ப்பு

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளியில் பணிபுரியும் ஆசிரியை ஒருவர், 3வது பிரசவத்துக்காக பேறுகால விடுப்பு கேட்டு விண்ணப்பித்தார். ஆனால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. 2 குழந்தைகள் பிரசவத்துக்கு மட்டும் பேறுகால விடுப்பு வழங்கப்படும். 3வது பிரசவத்துக்கு வழங்கப்படாது என்று உத்தரவிடப்பட்டது.

அதை எதிர்த்து அந்த ஆசிரியை சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதி என்.சதீஷ்குமார் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வக்கீல் என்.மனோகரன் ஆஜராகி கூறியதாவது: ‘மனுதாரர் ஆசிரியையாக பணியில் சேருவதற்கு முன்பு திருமணமாகி, 2 குழந்தைகளும் பிறந்துவிட்டனர். அவரது கணவர் 2004ம் ஆண்டு இறந்துவிட்டார். அதன்பின்னர் ஆசிரியை பணியில் சேர்ந்த மனுதாரர், மறுமணம் செய்துகொண்டார்.

அதைத் தொடர்ந்து அவர் கர்ப்பம் ஆனார். அவருக்கு கடந்த 2022ம் ஆண்டு மார்ச் 1ந் தேதி இரட்டைக்குழந்தைகள் பிறந்தன. அவர் பேறுகால விடுப்பு கேட்டு, 2022ம் ஆண்டு ஜனவரி 21ந் தேதி செய்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்கான அடிப்படை விதியை கல்வி அதிகாரி தவறாக புரிந்துகொண்டார். 1961ம் ஆண்டு பேறுகால பலன்கள் சட்டம், அரசியல் அமைப்பு சாசனத்தின் அடிப்படையில் இயற்றப்பட்டது. பேறுகால சட்டம் என்பது நலச்சட்டமாகும். அந்த சட்டத்தில், இதுபோல 3வது பிரசவத்துக்கு விடுப்பு வழங்க முடியாது என்று கூற முடியாது.’ இவ்வாறு அவர் வாதிட்டார்.

அரசு தரப்பில் ஆஜரான வக்கீல், ‘பேறுகால விடுப்பு குறித்து அரசு அவ்வப்போது தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்கிறது. தமிழ்நாடு பணியாளர்கள் மற்றும் நிர்வாகத்துறை கடந்த 2016 மற்றும் 2017ம் ஆண்டுகளில் அரசாணைகளை பிறப்பித்துள்ளது.

அதன்மூலம், 2 குழந்தைகள் பிரசவத்துக்கு மட்டுமே பேறுகால விடுப்பு வழங்க முடியும். மேலும், அரசு ஊழியர்களுக்கு அடிப்படை விதிகள் மட்டுமே பொருந்தும்.

இந்த விதிகளின்படி, மனுதாரருக்கு 3வது பிரசவத்துக்கு பேறுகால விடுப்பு வழங்க முடியாது. இதுதொடர்பாக ஐகோர்ட்டு டிவிசன் பெஞ்சும் தீர்ப்பு அளித்துள்ளது’ என்று வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி என்.சதீஷ்குமார் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

அரசு பெண் ஊழியர்களுக்கு 2 குழந்தைகள் பிரசவிக்க மட்டுமே பேறுகால விடுப்பு கண்டிப்பாக வழங்கப்படும் என்று விதிகள் உள்ளன. அதுவும் 365 நாட்களுக்கு மேல் விடுப்பு வழங்க முடியாது. இந்த விவகாரத்தில் அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்த பின்னர், அதை மீறி 3வது பிரசவத்துக்கு மனுதாரர் விடுப்பு கோர முடியாது. மேலும், 3வது குழந்தையை

பெற்றெடுப்பதை தடுக்கும்விதமாக இதுபோன்ற விதிகளை கொண்டுவந்துள்ள நிலையில், மனுதாரர் தற்போது 4 குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார். அதனால், மனுதாரர் 3வது குழந்தை பெற்று எடுக்க விடுப்பு கோர முடியாது. இவரது விண்ணப்பத்தை நிராகரித்தது சரிதான்.

இந்த மனுவை தள்ளுபடி செய்கிறேன். இவ்வாறு நீதிபதி கூறியுள்ளார். இதேபோல சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு ஆசிரியையும் 3வது பிரசவத்துக்கு பேறுகால விடுப்பு கேட்டு கொடுத்த விண்ணப்பத்தை அதிகாரிகள் நிராகரித்துவிட்டனர். அதை எதிர்த்து அவர் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு நீதிபதி என்.சதீஷ்குமார், ‘மனுதாரர் பணியில் சேருவதற்கு முன்பே 2 குழந்தைகளை பெற்று விட்டார். தற்போது பணியில் சேர்ந்த பின்னர், 3வது குழந்தைக்காக பேறுகால விடுப்பு கேட்டுள்ளார்.

சுப்ரீம் கோர்ட்டு பல்வேறு வழக்குகளில் பிறப்பித்த தீர்ப்பின்படி, 2 குழந்தைகளுக்கு மேல் பேறுகால விடுப்பு கோர முடியாது. எனவே, அவருக்கு பேறுகால விடுப்பு வழங்க மறுத்த உத்தரவு சரிதான். அதில் தலையிட முடியாது. வழக்கை தள்ளுபடி செய்கிறேன்’ என்று தீர்ப்பு அளித்துள்ளார்.



# தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களின் வாழும் உரிமையை பறிக்கும் செயல்: ராமதாஸ் கண்டனம்

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

குற்றவழக்குகளில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களின் கடைசி நம்பிக்கையாக இருப்பது ஜனாதிபதியிடம் தாக்கல் செய்யப்படும் கருணை மனுக்கள் தான். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 72ம் பிரிவின்படி, ஒருவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை குறைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

ஆனால், இந்த அதிகாரத்தை பல தருணங்களில் ஜனாதிபதிகள் முறையாக பயன்படுத்துவதில்லை. கருணை மனுக்கள் மீதான ஜனாதிபதியின் முடிவே இறுதியானது என்று புனிதப்படுத்துவதன் மூலம், குற்றவழக்குகளில் தண்டிக்கப்பட்டவர்களின் வாழும் உரிமையை மத்திய அரசு பறிக்க நினைக்கிறது. பல தருணங்களில் ஜனாதிபதிகளால் கருணை மனுக்கள் தள்ளுபடி செய்யப்படும் போது அதை எதிர்த்து செய்யப்படும் மேல்முறையீடுகளின் போது, அதை கனிவுடன் பரிசீலிக்கும் சுப்ரீம் கோர்ட்டு, தண்டிக்கப்பட்ட மனிதர்களின் தண்டனையை குறைத்தோ, ரத்து செய்தோ ஆணையிடுகின்றன.

அண்மைக்காலங்களில் கூட தூக்குமேடைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட பலர் சுப்ரீம் கோர்ட்டின் தலையீட்டால் காப்பாற்றப்பட்டனர். எனவே இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் இது தொடர்பாக செய்யப்பட உள்ள திருத்தத்தை மத்திய அரசு கைவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# கிருஷ்ணகிரியில் பெரியார் சிலை திறப்பு

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெரியார் சிலையை திராவிடர் கழக தலைவர் வீரமணி திறந்து வைத்தார்.

திராவிடர் கழகம் சார்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த மாதம் 28.8.2023 அன்று முப்பெரும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் பங்கேற்க கி.வீரமணி கிருஷ்ணகிரி மாவட்டம் வருகை புரிந்தார்.

கிருஷ்ணகிரியில் உள்ள புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்த அவர் தி.க.வினர் ஏற்பாடு செய்திருந்த பேரணியை துவக்கி வைத்தார். கிருஷ்ணகிரி பெங்களூர் சாலை வழியாக கட்சியினருடன் பேரணியாக நான்கு சக்கர வாகனத்தில் வலம் வந்த கி.வீரமணி கார்னேசன் திடல் அருகே புதிதாக அமைக்கப்பட்ட பெரியார் மையத்தை திறந்து வைத்தார்.

மேலும், பெரியார் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள தங்க நிறத்தினால் ஆன பெரியார் சிலையை அமைச்சர்களுடன் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து நூலகம் மற்றும் படிப்பகம் ஆகியவற்றை துவக்கி வைத்தார். பின் கார்னேசன் திடலில் அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு வந்த அவர் சிறப்பு சொற்பொழிவாற்றினார்.

விழாவில் அமைச்சர்கள் சக்கரபாணி,கே.என்.நேரு, ஆர்.காந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் தே.மதியழகன், ஒய்.பிரகாஷ் நகர் மன்ற தலைவர் பரிதாநவாப், அமைப்புசாரா ஓட்டுனர் அணி செங்குட்டுவன் மற்றும் திமுக கூட்டணி கட்சிகளின் முக்கிய நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் என பலரும் முப்பெரும் விழாவில் கலந்து கொண்டனர்.

## சாலையோர செடிகளை அகற்றும் பணி

திண்டுக்கல் மாவட்டம் பெரும்பாறை அருகே மீனாட்சி ஊத்து பகுதியில் இருந்து சித்தரேவு வரை மலைப்பாதை உள்ளது. இந்த சாலையில் அதிகமான வளைவுகள் உள்ளன.

மேலும் சாலையின் இருபுறமும் செடி, கொடிகள் படர்ந்துள்ளது. இதனால் பஸ், லாரி, கார், ஜீப் போன்ற வாகனங்கள் விலகி செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வளைவுகளில் திரும்பும் போதும் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். இது குறித்து ஆத்தூர் நெடுஞ்சாலைத் துறை யினருக்கு வாகன ஓட்டிகள் கோரிக்கை மனு கொடுத்த னர். அந்த கோரிக்கையை ஏற்று சித்தரேவுமீனாட்சி ஊத்து இடையே சுமார் 15 கி.மீ தூரம் வரை தார்சா லையின் இருபுறங்களிலும் உள்ள செடி, கொடி, புற்களை எந்திரம் மூலம் வெட்டி அதனை சுத்தம் செய்யும் பணி நடைபெறு கிறது. இதனை ஆத்தூர் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் கண்ணன், உதவி பொறி யாளர் பரத் ஆகியோர் ஆய்வு மேற் கொண்டனர்.



# எரிவாயு சிலிண்டர் விலை குறைப்பு! அரசியல் உள்நோக்கம்?

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியிருப்பதாவது:–

சமையல்எரிவாயுசிலிண்டர்விலையைகுறைத்ததற்கு காரணம், தேர்தல் நெருங்குவதற்கான அறிகுறிதான். பெட்ரோல், டீசல் விலையை குறைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. "இந்தியா" கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணைய வாய்ப்பு இருக்கிறது என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

மத்திய அரசு சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை அதிரடியாக குறைத்த நிலையில் இது 'இந்தியா' கூட்டணியை பாதிக்குமா? என்ற கேள்விக்கு முதல்வர் ஸ்டாலின் கொடுத்த பதிலால் மக்களுக்கு அடுத்த ஜாக்பாட் அடிக்கும் வாய்ப்பு உள்ளதா? என்ற கேள்வி எழுந்துள்ளது. அடுத்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது.இதில் பாஜகவை வீழ்த்த காங்கிரஸ், திமுக உள்பட 26 கட்சிகள் இணைந்து 'இந்தியா' பெயரில் கூட்டணி அமைத்துள்ளன.

மத்திய அரசு சார்பில் ரக்ஷா பந்தனையொட்டி சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையில் ரூ.200 குறைக்கப்பட்டுள்ளது. மேலும் பிரதமரின் உஜ்வாலா திட்ட பயனாளிகளுக்கு ஏற்கனவே ரூ. 200 ரூபாய் குறைத்து சிலிண்டர் விநியோகிக்கப்படும் நிலையில் மேலும் ரூ.200 குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பிரதமரின் உஜ்வாலா திட்ட சிலிண்டர் பயனாளிகளுக்கு சிலிண்டருக்கு ரூ. 400 குறைந்துள்ளது.

இந்நிலையில் தான் நாடாளுமன்ற தேர்தலை மனதில் வைத்து மத்திய அரசு சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை குறைத்துள்ளதாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்து வருகின்றன. அதோடு நாடாளுமன்ற தேர்தலில் தோல்வி பயம் ஏற்பட்டுள்ளதால் பிரதமர் மோடி சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை குறைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர். இது தற்போது விவாதமாகி உள்ளது. வடகிழக்கு பருவமழை தொடங்கும் நிலையில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் அவரது சொந்த தொகுதியான கொளத்தூர், திரு.வி.க. நகரில் நடக்கும் மழைநீர் வடிகால் பணிகளை நேரில் ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்க முதல்வர் ஸ்டாலின் அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியபோது, பத்திரிகையாளர் ஒருவர், சமையல் எரிவாயு சிலிண்டர் விலை குறைப்பு என்பது 'இந்தியா' கூட்டணிக்கு நெருக்கடியா?" என கேள்வி எழுப்பினார். அதற்கு முதல்வர் ஸ்டாலின், 'கியாஸ் சிலிண்டர் விலை குறைப்பு தேர்தல் நெருங்குவதற்கான அறிகுறியாக உள்ளது. பெட்ரோல், டீசல் விலை குறைந்தாலும் ஆச்சரியப்படுவதற்குஇல்லை. 'இந்தியா' கூட்டணியில்மேலும்கட்சிகள்இணையவாய்ப்புள்ளது" என தெரிவித்தார்.

அதேபோல் இந்திய தேசிய காங்கிரஸின் தமிழகத் தலைவர் கே.எஸ். அழகிரி கூறியதாவது:

நாடு முழுவதும் வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.200 குறைக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய பா.ஜ.க. அரசு அறி

வித்துள்ளது. ஐந்து மாநில தேர்தலை எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலையை மனதில் கொண்டு இந்த முடிவை அரசியல் ஆதாய நோக்கத்தில் எடுத்து உள்ளது. எந்தவித விவாதமும் இல்லாமல் 3 வேளாண் சட்டங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதை எதிர்த்து ஓராண்டு காலம் போராடிய விவசாயிகளை சந்தித்து குறைகளை கேட்க முன்வராத கொடூரமான ஆட்சி நடத்திய பிரதமர் மோடி, பஞ்சாப் தேர்தலை மனதில் கொண்டு 3 வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெற்றார்.

அதைப் போலத்தான் இப்போதும் விலை குறைப்பு நடந்திருக்கிறது. பா.ஜ.க. ஆட்சியில் 9 ஆண்டுகளில் சிலிண்டர் விலை ரூ.1118.50 ஆக கடுமையாக உயர்த்தப்பட்டது. தற்போது அதில் ரூ.200 மட்டுமே குறைத்திருப்பது யானைப் பசிக்கு சோளப்பொரி போட்டதாகத் தான் கருத வேண்டும் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று வாக்குறுதி வழங்கி ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. ஆட்சியில் வேலையில்லா திண்டாட்டம் வரலாறு காணாத வகையில் 23 சதவீதமாக உயர்ந்து உள்ளது. ஆனால், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததை திசைத் திருப்புகிற நோக்கத்தில் ராமர் கோவில் கட்டியும், அரசமைப்புச் சட்ட உறுப்பு 370 ரத்து செய்தும், மணிப்பூர் மாநிலத்தில் வகுப்புவாத கலவரத்தை தூண்டி விட்டும் வெறுப்பு அரசியல் மூலம் வாக்கு வங்கியை விரிவுபடுத்துகிற முயற்சியில் மோடி அரசு ஈடுபட்டு வருகிறது. ஆனால், கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி வாங்கும் சக்தியை இழந்து வாழ்வாதாரத்திற்காக போராடி வருகிற மக்கள் 2024 மக்களவை தேர்தலில் உரிய பாடத்தை மோடி அரசுக்கு நிச்சயம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# சென்டர் மீடியனில் மோதி தினமும் விபத்தில் சிக்கும் வாகனங்கள்

மதுரைகொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் எல்.ஐ.சி. சந்திப்பு வளைவு பகுதியில் எச்சரிக்கை பலகை மற்றும் சென்டர் மீடியனில் ஒளிரும் ஸ்டிக்கர் எதுவுமி இல்லா ததால் தினந்தோறும் வாகனங்கள் விபத்தில் சிக்குவது தொடர் கதையாகி வருகிறது. மதுரைகொல்லம் தேசிய நெடுஞ் சாலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாக தென்காசி, மதுரை, தேனி, திருநெல்வேலி, கொல்லம் ஆகிய நகரங்களுக்கு 24 மணி நேரமும் ஆயிரக்க ணக்கான வாகனங்கள் சென்று வருகிறது. ராஜபாளையம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள நூற்பாலை உள்ளிட்ட ஆலைகளுக்கு மூலப்பொரு ருட்கள் மற்றும் உற்பத்தி பொருட் களை கொண்டு செல்ல தினசரி நூற்றுக்கணக் கான கனரக வாகனங்களும் இவ்வழியே செல்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் எல்.ஐ.சி. சந்திப்பு அருகே வளைவு பகுதியில் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன் சாலையின் நடுவே சென்டர் மீடியன் அமைக்கப்பட்டது. உயரம் குறைவாக உள்ள சென்டர் மீடியனில் பேருந்து கள், கனரக வாகனங்கள் சிக்கி அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. வளைவு பகுதி யில் எச்சரிக்கை பலகைகள் இல்லாதது மற்றும் சென்டர் மீடியனில் ஒளிரும் ஸ்டிக்கர் கள் இல்லாததால் இரவு நேரத்தில் தேசிய நெடுஞ்சா லையில் வரும் வாகனங்கள் விபத்தில் சிக்கி வருகிறது. இந்தநிலையில் கோயம் புத்தூரில் இருந்து ராஜபா ளையம் பகுதியில் உள்ள ஆலைக்கு மூலப்பொருட் களை ஏற்றி வந்த சரக்கு லாரி சென்டர் மீடியனில் மோதி விபத்து ஏற்பட்டது.

லாரியில் சரக்குகள் அதிக அளவில் இருந்ததால் மீட்பு பணியில் சிரமம் ஏற்பட்டது. இதனால் மதுரை கொல் லம் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சுமார் 5 மணி நேரத்திற்கு பிறகு லாரியில் இருந்த சரக்குகள் இறக்கப் பட்டு பொக்லைன் எந்திரம் மூலம் லாரி அப்புறப்படுத் தப்பட்ட பின் போக்குவ ரத்து சீரானது. அதே போல் அதே சென்டர் மீடியனில் சரக்கு வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. சென்டர் மீடியன் உயரத்தை அதிகரித்து எச்சரிக்கை விளக்குகள் பொறுத்த வேண்டும் என வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத் துள்ளனர்.



# நவீன அறிவிப்புகளால் போக்குவரத்து கழக நஷ்டம் குறையுமா?

ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் பொது போக்குவரத்து சேவை முக்கிய பங்கு வகிக்கிறது. நகர், புறநகர், மலைப்பகுதி மற்றும் விரைவு பேருந்து சேவைகளை மிகவும் சிக்கனமான மற்றும் திறமையான முறையில் நமது மாநிலத்தில் போக்குவரத்து சேவை அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

அண்டை மாநிலங்களான ஆந்திரபிரதேசம், கர்நாடகம், கேரளம் மற்றும் புதுச்சேரிக்கும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் பெரும்பாலும் சிற்றூர் உட்பட மக்கள் குடியிருக்கும் அனைத்து பகுதிகளும் போக்குவரத்து சேவை மூலம் இணைக்கப்படுகின்றன.

இந்நிலையில் தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் 2022 – 2023ம் நிதியாண்டில் ரூ.4,978 கோடி நஷ்டத்தை சந்தித்து உள்ளதாக போக்குவரத்துத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக போக்குவரத்துறையின் கீழ் 8 அரசு போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன. இவற்றின் மூலம் 20,127 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் தினசரி 1.70 கோடி பேர் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். அரசு போக்குவரத்துக் கழகங்களில் 1,16,259 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

கடந்த 2022 – 2023ம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.12,007 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

இதில், இயக்க மூலம் ரூ.6,705.69 கோடியும், இயக்கம் அல்லாதவைகள் மூலம் ரூ.5,256.89 கோடி வருவாய் கிடைத்துள்ளது. ஆனால், இந்த கால கட்டத்தில் ரூ.16,985 கோடி செலவு ஏற்பட்டுள்ளது.

இதன்படி தற்போது வரை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு இந்த நிதியாண்டில் மட்டும் ரூ.4,978.38 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு மாதத்திற்கு ரூ.452.58 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது

எனவே, நஷ்டத்தில் இயங்குவதற்கே நடத்தப்படுகின்ற துறை என்ற பெயரை தவிர வேறு என்ன சாதித்து இருக்கிறது அரசு போக்குவரத்து துறை?

பஸ்கள் அனைத்திலும் பெரும்பாலான நேரத்தில் இரவிலும் பகலிலும் பயணிகள் நின்று கொண்டே பயணம் செய்கிறார்கள். தாங்கள் செல்லும் ஊர் வந்துவிட்டதா என்று பார்க்கக்கூட முடியாத அளவிற்கு கண்ணாடிகளில் விளம்பரம் ஒட்டப்பட்டிருக்கிறது.

அதன் மூலம் வரும் வருவாய் மிக மிக சொற்பமே! இதைத்தாண்டி வருவாய்ப்பெருக்க ஏராள வழிகள் உள்ளன.



ஒவ்வொரு ரூட்டிலும் அதிக கட்டணத்தில் டீலக்ஸ் பஸ்கள் விடலாம் (காரே சாதாரண மனிதர்களுக்கு எட்டாக்கனி அதிலேயும்10 லட்சம் 20 லட்சம் 50 லட்சம்ஒரு கோடி என்று உள்ளதல்லவா?அதைப்போல உயர்வகுப்பு கட்டணத்தில் பயணம் செய்ய பயணிகள் தயாராக உள்ளனர்).

ஆம்னி பஸ்களின் கட்டணக்கொள்ளையை தடுத்து நிறுத்துவோம் என்று ஏன் வெட்டியாக பேட்டி கொடுக்க வேண்டும் ?அத்தனை ஆம்னி பஸ்களையும் ஒரே குடைக்கு கீழ் கொண்டுவந்து அரசே டிக்கெட் விநியோகம் செய்து பயணிகளுக்கு பஸ்களை அலாட் செய்யலாமே? (ரெட் பஸ் போன்றவை இதைத்தானே செய்கின்றன? கொல்கத்தாவில் அனைத்து ஆட்டோக்களையும் இப்படித்தானே இணைத்து அரசே பயணிகளுக்கு ஆட்டோக்களை ஒதுக்குகிறது ?) கர்நாடகாவில் தாங்கள் விரும்பும் இடத்தில் பயணிகள் இறங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது. கூடுதல் கட்டணம் வாங்கிக்கொண்டு இங்கேயும் அப்படிச்செய்யலாமே ?

பஸ் டிப்போக்கள் எம்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் ஆகிவிட்டன. போக்குவரத்து சங்கங்களின் ஆதிக்கங்கள்சொல்லவொன்னாமுடியாததுன்பங்களை எதிரெதிர் தொழில் சங்கங்களின் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்துகின்றன என்பது அரசு ஒன்றும் அறியாதது அல்ல. இந்தக் குறையை போக்கி தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தி தூய நல்லெண்ணத்தை உருவாக்க அரசுகள் முயல வேண்டும்.

ஒவ்வொரு மூன்று கிலோ மீட்டருக்கும் ஒரு மேல்நிலைப்பள்ளி உள்ளது. மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் தரும்போது வீட்டிலிருந்து 3 கி.மீ.தூரத்தில் உள்ள பள்ளிக்கு மட்டும்தான் இலவச பாஸ் என்று சொல்வதற்கென்ன? எதற்கு 17 கி.மீ.தூரமுள்ள பள்ளிக்கெல்லாம் சென்று படிக்க இலவச பாஸ் தருகிறார்கள்?

இலவச பஸ் பாஸ் ஏழைகளுக்கு சரி! ஒரு லட்சம், ஒன்றே கால் லட்சரூபாய் சம்பளம் வாங்கும் ஆசிரியைகளுக்கு எதற்கு இலவச டிக்கெட்? ஒரு நாளைக்கு எத்தனை முறை பயணம் செய்யலாம் என்ற லிமிட் ஏன் வைக்கவில்லை?

புதிய பஸ்கள்விட்டால் ஜெயலலிதா படங்கள் அதில் ஒட்டப்பட்டதல்லவா? யுகப்புரட்சி மாதிரி பஸ்சில் பயணம் செய்ய மகளிர்களுக்கு கட்டணமில்லை என்று தளபதி அறிவித்தார் அல்லவா? பேருந்தில் ஒட்டப்பட்டிருக்கும் அந்த அறிவிப்பில் ஏன் ஸ்டாலின் படம் இடம்பெறவில்லை? போக்குவரத்து அமைச்சர் இதை ஏன் வலியுறுத்தவில்லை? என உடன்பிறப்புகள் கேட்கும் அதே வேளையில் தனியார் பஸ்மோகங்களை தவிர்த்துஅரசுபோக்குவரத்துகழகங்களில்பயணிக்கும் மனப்பான்மையை பொதுமக்களிடையே ஏற்படுத்த வேண்டும் இதனால் கூட ஓரளவுக்கு போக்குவரத்துக் கழகங்களின் தலைமேல் சுமந்து கொண்டிருக்கும்



நஷ்டத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் விலகும் என்பதில் உண்மையுள்ளது என்பதையும் மறுக்கலாகாது.

அரசுக்கு வருமானம் ஈட்டிக் கொடுக்கும் கலால் துறை, மின்சாரத்துறை, பத்திரப்பதிவுத்துறை, இந்து அறநிலையத்துறை போன்றவற்றில் காட்டும் முக்கியத்துவத்தை ஈடுபாட்டை போக்குவரத்து துறையிலும் செலுத்தி நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும்போக்குவரத்துதுறையின்தன்மையை மாற்றி லாபம் இல்லாவிடினும் நஷ்டம் இல்லை என்ற அளவிற்கு இந்த அரசு மாற்ற முயற்சிக்குமா என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.




# சுரண்டும் சுங்கவரித்துறை கட்டணம்

மதுரை, தூத்துக்குடி, உளுந்தூர்பேட்டை, திண்டுக்கல், திருச்சி, சேலம், மேட்டுப்பட்டி, உட்பட 20 சுங்கச்சாவடிகளில் செப்டம்பர் 1ம் தேதி நள்ளிரவு முதல் சுங்கக்கட்டணம் உயர்ந்துள்ளது. இந்த திடீர் கட்டண உயர்வுக்கு அரசியல் கட்சி தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

தமிழகம் முழுவதும் மொத்தமுள்ள 54 சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு 2 பிரிவாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஏப்ரல் மாதம் குறிப்பிட்ட சுங்கச்சாவடிகளுக்கும், செப்டம்பர் மாதம் மீதமுள்ள சுங்கச்சாவடிகளுக்கும் வருடந்தோறும் கட்டணம் உயர்த்திக்கொள்ள தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அனுமதித்துள்ளது.

இதன்படி, இந்த வருடம் 2023ம் ஆண்டுக்கான கட்டண உயர்வு தமிழகம் முழுவதும் உள்ள 20 சுங்கச்சாவடிகளில், செப்டம்பர் 1 நள்ளிரவு முதல் அமல்படுத்தப்படுகிறது. திண்டுக்கல், திருச்சி,சேலம் ,மேட்டுப்பட்டி, உளுந்தூர்பேட்டை, மதுரை, தூத்துக்குடி உட்பட 20 சுங்கச்சாவடிகளில் இந்த கட்டண உயர்வு அமலுக்கு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, மதுரை அருப்புக்கோட்டை சாலையில் உள்ள எலியார்பத்தி சுங்கச்சாவடியில் சுங்க கட்டண உயர்வு 1ம் தேதி நள்ளிரவு முதல் அமலுக்கு வந்ததாக சுங்கச்சாவடி நிர்வாகம் தெரிவித்துள்ளது..

அதனடிப்படையில் கார், வேன், ஜீப் உள்ளிட்ட வாகனங்கள் ஒருமுறை சென்று வர பழைய கட்டணம் 85 ரூபாயிலிருந்து 90 ரூபாயாகவும், 2 முறை சென்று வர 125 ரூபாயிலிருந்து 135 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மாதாந்திர கட்டணம் ரூபாய் 2505ல் இருந்து 2740 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அதிரடி உயர்வு: இலகு ரக வாகனங்கள் ஒரு முறை சென்று வர 145 ரூபாயிலிருந்து 160 ரூபாயாகவும் இரு முறை சென்று வர 220 ரூபாயிலிருந்து 240 ஆகவும் மாதாந்திர கட்டணம் 4385 ரூபாயிலிருந்து 4,800 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோல் லாரி, பஸ் உள்ளிட்ட கனரக வாகனங்கள் ஒருமுறை சென்று வர கட்டணம் ரூபாய் 290 லிருந்து 320 ரூபாயாகவும் இரு முறை சென்று வர 440 லிருந்து 480 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மாதாந்திர கட்டணமாக ரூபாய் 8770 லிருந்து 9595 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோல் 2 அச்சு மிக கனரக வாகனங்கள் ஒரு முறை சென்று வர ரூபாய் 470 லிருந்து 515 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 2 முறை சென்று வர கட்டணம் 705 ரூபாயிலிருந்து 770 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது மாதாந்திர கட்டணமாக 14095 ரூபாயிலிருந்து 15420 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

பாஸ் டேக் வாகனங்கள்: மேலும், ஒருமுறை சென்று வருவதற்கான கட்டணம் 5 ரூபாயில் இருந்து 45 ரூபாய் வரையும், 2 முறை பயண கட்டணம் 10 ரூபாயிலிருந்து 65 ரூபாய் வரையும், மாதாந்திர கட்டணம் 235 ரூபாயிலிருந்து 1325 ரூபாய் வரையும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த கட்டண நிர்ணயம் அனைத்தும் பாஸ் டேக் வாகனங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், பாஸ் டேக் இல்லாத வாகனங்கள் டபுள் மடங்கு கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் டோல்கேட் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த விலை உயர்வானது வாகன ஓட்டிகளுக்கு அதிருப்தியை தந்துவருகிறது. ஏற்கனவே விலைவாசி உயர்வால், பொதுமக்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் நிலையில், சுங்கக்கட்டணத்தையும் உயர்த்தினால் அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் அதிகரிக்குமே, இதனால் ஏழை எளிய, நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்களே? என்று தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

கோரிக்கை: அதுமட்டுமல்ல, விலைவாசி உயர்வை

கட்டுப்படுத்தாமலும், தேசிய நெடுஞ்சாலைகளை முறையாக பராமரிக்காமலும் சுங்க கட்டணத்தை மட்டும் உயர்த்துவது எந்த வகையில் நியாயம்? என்று கேட்பதுடன், உடனடியாக இந்த கட்டண உயர்வை திரும்ப பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு வருகிறார்கள்.

தான்தோன்றித்தனமாக தன் விருப்பத்திற்கு ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் அடிக்கடி உயர்த்திக் கொண்டிருக்கும் டோல்கேட் நிர்வாகம் நெடுஞ்சாலைத்துறை ஆணையத்தின் அதிகாரத்தின் கீழ் வருகிறது. இதனால் இந்த கட்டண உயர்வுக்கு தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையம் தான் முழு பொறுப்பு.

சரி. நெடுஞ்சாலை துறை ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி டோல்கேட் நிர்வாகங்கள் தங்களுடைய சுங்க வரி கட்டணத்தை உயர்த்துக் கொள்கின்றன. அதற்கு ஏற்றார் போல் டோல்கேட் தங்களது கட்டமைப்பின் தரத்தை உயர்த்தி இருக்கிறதா என்றால் இங்கு மிகப் பெரிய சுழியம் (0)தான் மிஞ்சுகிறது.

தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையத்தின் கீழ் வரும் சுங்க கட்டணம் வசூலிக்கும் நெடுஞ்சாலையின் எந்த ஒரு பகுதியிலும் உள்ளூர் பேருந்து நிறுத்தங்கள் கட்டிக் கொடுத்திருக்க வேண்டும் அவ்வாறு கட்டிக் கொடுத்திருக்கும் பேருந்து நிறுத்தங்களில் குப்பைத் தொட்டியும் குடிநீரும் முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

ஆனால், நடப்பது என்ன? நீங்கள் NH47 நெடுஞ்சாலைகளில் பயணித்திருப்பீர்களேயானால், எந்த ஒரு உள்ளூர் பேருந்து நிறுத்தத்தின் அருகாமையிலும் குப்பைத் தொட்டி கண்ணிலேயே படுவதில்லை. குடிநீர் கட்டமைப்பு பெயரளவுக்கு இருக்கும். ஆனால், குடிநீர் இருப்பதில்லை.

இது தவிர சாலையின் சென்டர் மீடியன்களில் வைக்கப்படும் செடிகள் முறையாக பராமரிக்கப்படுவதில்லை. தேவை ஏற்படும்பொழுது தகுந்த காலங்களில் தண்ணீர் தெளிப்பதில்லை. செடிகளை குறிப்பிட்ட காலங்களுக்கு ஏற்ப டிரிம் செய்வதில்லை. மற்றும் சாலையின் இரு புறங்களிலும் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப நெடுஞ்சாலை துறை நிர்வாகம் ஏற்கனவே வெட்டப்பட்ட மரங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் புதிய மரச்செடிகளை வைத்து பராமரிக்க வேண்டும். அவ்வாறு பராமரிக்கும் செடிகளை அருகிலுள்ள தனியார் நிலச்சுவான்தார்கள் வசதிக்கு ஏற்ப வெட்டிக் கொள்ளவும் நெடுஞ்சாலைத் துறை நிர்வாகம் அனுமதிக்கிறது. இதுவே ஒரு மிகப்பெரிய விதிமீறல் ஆகும். அவ்வாறு வெட்டப்படும் மரச்செடிகளுக்கு ஈடாக எந்த ஒரு புதிய செடியையும் நெடுஞ்சாலை துறை நிர்வாகம் சம்பந்தப்பட்ட நில உடமையாளர்களோ நட்டு வளர்ப்பதில்லை. இது மட்டுமில்லாமல் நெடுஞ்சாலையில் உள்ள செடிகளை பராமரிக்க, சாலையின் ஓரங்களில் குவியும் மண் மற்றும் தூசி பொருள்களை அப்புறப்படுத்த நெடுஞ்சாலைத்துறை தற்காலிக பணியாளர்களை வைத்து பணி செய்கிறார்கள். இந்தப் பணியாளர்களின் எண்ணிக்கையை அட்ஜஸ்ட் செய்து ஊழல் நடப்பதாகவும் வாய் வழிச் செய்தி கசிகிறது. நெடுஞ்சாலைகளில் ஆங்காங்கே திடீர் திடீரென ஏற்படும் டிராபிக்குகள் உடனடியாக கிளியர் செய்யப்படுவதில்லைஎன்றகுறைஎல்லாஇடங்களிலும்இருக்கிறது.

சில டோல்கேட்டுகளின் அருகாமையில் உள்ள கடைகள், வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்களால் ஏற்படுத்தப்படும் குப்பை கூளங்கள் முறையாக பராமரிக்கப்படுவதில்லை. எந்த ஒரு டோல்கேட்டிலும் குறைதீர்க்கும் புத்தகங்களை எந்த ஒரு வாகன ஓட்டிக்கும் அல்லது பொது மக்களுக்கும் அவர்கள் கண்களிலேயே காட்டுவதில்லை.

டோல்கேட் அருகினிலே கட்டமைக்கப்பட்டிருக்கும் குளியலறை மற்றும் கழிப்பறைகளின் விளைவால் வெளியேறும் கழிவு நீர்களை திறந்த வெளியில் விட்டுவிடும் அவலங்கள் நிறைய டோல்கேட்டில் இருக்கிறது. இதன் விளைவாக இந்த டோல்கேட் அருகே உள்ள கழிப்பிடங்களின் அமைவிடத்தில் பல சிறார், சிறுமியர்கள், பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்கள், பெண்கள் ஆகியோர் எளிதில் இந்த கழிவுநீரால் வெளிவரும் தொற்றினால் பாதிக்கப்படுகிறார்கள்.

இதுகுறித்து நமது அரசியல் சூரியன் சார்பாக தேசிய நெடுஞ்சாலைதுறைஆணையசேலம்அலுவலகத்திற்கு பலமுறை தொலைபேசி மூலமாகவும், ஈமெயில் மூலமாகவும் புகார் அனுப்பியும் அவர்கள் எந்த உடனடி நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறைகளை சுட்டிக்காட்டும் நமக்கே இந்த நிலைமை என்றால் பொதுமக்களின் நிலைமை. அந்தோ பரிதாபம்!!

இது மட்டுமல்லாமல் ஒவ்வொரு டோல்கேட்டிலும் எமர்ஜென்சி வெகிக்கிள்ஸ் மற்றும் ஆம்புலன்ஸ்கள் நிறுத்தப்பட வேண்டும். ஆனால், பெரும்பாலான டோல்கேட்டுகளில்இந்தகட்டமைப்புகள்இல்லாமலேயே உள்ளது.

மொத்தத்தில் டோல்கேட் நிர்வாகம் கட்டணத்தை வசூல் செய்வதிலேயே குறியாக இருந்தால் மட்டும் போதாது பயனாளிகளுக்கு தேவையான கட்டமைப்பிலும் சிறந்த கவனம் செலுத்தி சிறந்த சேவையாற்ற வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# இந்தியாவின் கட்டுப்பாட்டில் நிலாவும் சூரியனும்...!



நிலவுப்பயணம்:

உலகில் உள்ள அனைத்து வளர்ந்த நாடுகளும் தத்தமது நாட்டின் விண்வெளி கட்டமைப்பு மூலம் சந்திரனை தெரிந்து கொள்ளவும் ஆய்வு செய்யவும் பூமியில் வசிக்கும் மனித குலத்துக்கு உதவிகரமான வகையில் நிலவில் ஏதேனும் கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்பு நோக்கிலும் நிலவு பயணத்தை மேற்கொள்கின்றன.

அறிவியல் விஞ்ஞான தொழில்நுட்பத்தில் வளர்ந்த அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஜெர்மன் போன்ற உலக நாடுகள் இதில் ஓரளவு வெற்றிக்கு முனைந்துள்ளன.

இந்த வரிசையில் தனது சொந்த தொழில் நுட்பத்தின் மூலமாக வான்வெளி ஆதிக்கத்தை நிலைநாட்டும் ஒரு பகுதியாக நமது விண்வெளி ஆராய்ச்சி இயல் வல்லுனர்களால் சந்திரன் திட்டம் மேற்கொள்ளப்பட்டு இன்று உலகளவில் சாதித்து காட்டியுள்ள நாடாக இந்தியா ஒரு அறிவியல் சகாப்தத்தில் முத்திரை பதித்துள்ளது.

நிலவுக்கு விண்கலம் அனுப்பும் திட்டங்களின் முக்கியமான நோக்கங்களாக கருதப்படுவது நிலவு உருவான மற்றும் பரிணாம வளர்ச்சியின் வழியைப் புரிந்துகொள்வது. (ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு படிப்படியாக மாறியது) பூமி உட்பட சூரிய குடும்பத்தின் வரலாற்றைப் புரிந்துகொள்ள உதவுவதற்காக இன்று பொதுவாக நாம் அறிந்து கொள்கிறோம்.

இந்தப் பணியில் நாம் இதுவரை நிலவுக்கு மூன்று கட்டமாக விண்கலங்களை ஏவி அதில் வெற்றியும் கண்டுள்ளோம்.

இதற்கான விதையை 2003ஆம் ஆண்டே தூவியவர் அப்போதைய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய். அந்த ஆண்டு சுதந்திர தின உரையில், "நிலவை நோக்கிய இந்தியாவின் கனவுத் திட்டம் தொடங்கிவிட்டது; விரைவில் விண்கலம் நிலவுக்கு அனுப்பப்படும்" என்று சந்திரயான் குறித்த தகவல்களை மகிழ்ச்சியோடு வெளியிட்டார். அதன்பின்னர் 2004–2005ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காகவே நிதியை ஒதுக்கப்பட்டு, 2008ஆம் ஆண்டு இந்தியாவின் நிலவை நோக்கிய முதல் கனவுத் திட்டம் சாத்தியமானது.

முழுவதும் இந்திய தொழில் நுட்பத்துடன் உருவான 1380 கிலோ எடை கொண்ட சந்திரயான்1 (Chandrayaan-1) விண்கலம் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தால் சந்திரயான் திட்டத்தின் கீழ் விண்வெளிக்குச் செலுத்தப்பட்ட ஆளில்லாத நிலாப் பயணக்கலம் ஆகும். இந்தியா இந்த விண்கலத்தினை (பி.எஸ்.எல்.வி எக்ஸ்.எல்) ராக்கெட் (முனைய ஏவூர்தி) (PSLV-XL) ஐப் பயன்படுத்தி 2008 அக்டோபர், 22 இல் ஆந்திரப் பிரதேசம் ஸ்ரீஹரிகோட்டா, சதீஸ் தவான் விண்வெளி மையத்திலிருந்து விண்ணில் ஏவியது. இது 2009 ஆகஸ்ட் வரை இயக்கத்தில் இருந்தது. இதற்கான நிதி 386 கோடி ரூபாயாகும் இதன் திட்ட இயக்குனராக தமிழகத்தை சேர்ந்த மயில்சாமி அண்ணாதுரை செயல்பட்டார்.

சந்திரயான்1 நிலவில் நீர் இருப்பதற்கான தடயங்களை உறுதியாகக் கண்டறிந்தது. இது ஒரு அசகாய கண்டுபிடிப்பு. நிலவின் வட துருவப் பகுதியில் நீர் பனியைக் கண்டுபிடித்தது. இது சந்திர மேற்பரப்பில் மெக்னீசியம், அலுமினியம் மற்றும் சிலிகான் ஆகியவற்றைக் கண்டறிந்தது. சந்திரனின் உலகளாவிய அளவில் இந்த பணியின் மற்றொரு சாதனை யாகும்.

சந்திரயான்1 இன் சாதனைகள்:

1.சந்திராயன் 312 நாட்கள் இயக்கப்பட்டு அதன் திட்டமிட்ட நோக்கங்களில் 95% அடைந்தது.

2. நிலவு மண்ணில் நீர் மூலக்கூறுகளின் பரவலான இருப்பைக் கண்டறிந்தது.

3. சந்திரன் ஒரு காலத்தில் முழுவதுமாக உருகி யிருந்தது சந்திரயானின் நிலவின் கனிமவியல் மேப்பர் உறுதி செய்யப்பட்டது.

4. சந்திரயான் இமேஜிங் எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோமீட்டர் சந்திரனில் இரண்டு இருப்பதை பலவீனமான சூரிய எரிப்புகளைக் கண்டறிந்தது.

5. அமெரிக்க விண்கலங்கலான அப்பல்லோ 11 மற்றும் 15 தரையிறங்கும் இடத்தின் படங்களை சந்திரயான் பதிவு செய்தது.

சந்திரயான் 2

சந்திரயான்1 போலல்லாமல், M 3850 கிலோ எடை கொண்ட சந்திரயான்2 அதன் விக்ரம் தொகுதியை நிலவின் மேற்பரப்பில் மென்மையாக தரையிறக்க முயற்சிக்கும் மற்றும் பல அறிவியல் சோதனைகளை மேற்கொள்ள ஆறு சக்கர ரோவர், பிரக்யான் சந்திரனில் நிலைநிறுத்தப்படும். சந்திரயான்2 திட்ட இயக்குநராக சென்னையைச் சேர்ந்த வனிதா முத்தையா பணியாற்றினார். சந்திரயான் 2 திட்டத்துக்கு ரூ.978 கோடி செலவிடப்பட்டது.

சந்திரயான்2 விண்கலம் தன்னகத்தை கொண்டுள்ள லேண்டர் மற்றும் ரோவரை இருக்கும் முயற்சியில் சற்று பின்னடைவு ஏற்பட்டு லாண்டர் கருவி உடைந்து விட்டாலும் சந்திரன் இரண்டின் ஆர்பிட்டர் வெற்றிகரமாக நிலவை சுற்றி வந்ததோடு அல்லாமல் சந்திரன் மூன்றின் வெற்றிக்கும் உறுதுணையாக இருந்தது.

சந்திரயான் 3

சந்திராயன் இரண்டின் பொய்த்து போன யதார்த்தத்தைக் கண்டு துவளாமல் உடனடியாக தங்களைத் தயார்படுத்திக் கொண்டு மீண்டும் ஒரு தமிழக விஞ்ஞானி வீரமுத்துவேல் அவர்களின் தலைமையில் 3900 கிலோ எடையுள்ள சந்திரயான் 3 விண்கலத்தை 615 கோடி ரூபாய் செலவில் சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து கடந்த 14 ஜூலை 2023 அன்று ஏவப்பட்ட சந்திரயான் 3 லேண்டர் 2023 ஆகஸ்ட் 23 ஆம் தேதி, நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

சந்திராயன்3 திட்ட வெற்றிக்காக இந்திய முதன்மை அமைச்சர் நரேந்திர மோடி பெங்களூரு இசுரோ தொலையளவியல், கண்காணிப்பு, கட்டளை வலைப்பிணையத்துக்கு நேரடியாகச் சென்று, இசுரோ அறிவியலாளர்கள் குழுவைப் பாராட்டினார். மேலும், அவர் விக்ரம் தரையிறங்கி நிலா தரையைத் தொட்ட இடத்துக்கு சிவசக்திப் புள்ளி எனப் பெயரிட்டார். மேலும், அவர் விக்ரம் தரையிறங்கி நிலாத் தரையைத் தொட்ட நாளான ஆகஸ்ட் 23 தேசிய விண்வெளி நாளாக அறிவித்தார்.

சந்திரயான்3 நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கி முதற்கட்ட ஆராய்ச்சியை துவங்கி விட்டது. முதற்கட்ட ஆராய்ச்சியில் பல திடுக்கிடும் தகவல்களை இஸ்ரோ கண்டுபிடித்துள்ளது என்று கூறியுள்ளது. நிலவில் நீர் இருக்கும் ஆதாரத்தை தேட போன இடத்தில் இப்போது பல பொக்கிஷங்களை இஸ்ரோ கண்டறிந்துள்ளது.

ஆகஸ்ட் 23 அன்று நிலவில் தரையிறங்கிய சந்திரயான்3 இன் பிரக்யான் ரோவரில் உள்ள லேசர் தூண்டப்பட்ட பிரேக்டவுன் ஸ்பெக்ட்ரோஸ்கோப் (எல்ஐபிஎஸ் LIBS) கருவி, மூலக்கூறில் முதல் இடத்திலேயே அளவீடுகளை செய்துள்ளது என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது. தென் துருவத்திற்கு அருகிலுள்ள சந்திர மேற்பரப்பின் கலவையில் "கந்தகத்தின் இருப்பை இஸ்ரோ உறுதிப்படுத்தியுள்ளது".

கந்தகம் என்பது ஆங்கிலத்தில் சல்பரை குறிக்கிறது. இந்திய விண்வெளி ஏஜென்சியின் முதற்கட்ட ஆய்வுகள், எதிர்பார்த்தபடி அலுமினியம் (Al), சல்பர் (S), கால்சியம் (Ca), இரும்பு (Fe), குரோமியம் (Cr), மற்றும் டைட்டானியம் (Ti) ஆகியவற்றைக் கண்டறிந்தது. மேலும் அளவீடுகள் மாங்கனீசம் (Mn), சிலிக்கான் (Si) மற்றும் ஆக்ஸிஜன் (O) இருப்பதையும்

வெளிப்படுத்தியுள்ளன.

அடுத்தகட்டமாக, நிலவின் மேற்பரப்பில் ஹைட்ரஜன் உள்ளதா என்பது குறித்து தற்போது ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது. LIBS கருவியானது பெங்களூரில் உள்ள இஸ்ரோவில் உள்ள எலக்ட்ரோ ஆப்டிக்ஸ் சிஸ்டம்களுக்கான ஆய்வகத்தில் (LEOS) உருவாக்கப்பட்டுள்ளது. இது தீவிரமான லேசர் பாய்ண்ட்களை வெளிப்படுத்துவதன் மூலம் பொருட்களின் கலவையை பகுப்பாய்வு செய்யும் ஒரு அறிவியல் நுட்பமாக செயல்படுகிறது.

ஒரு உயர் ஆற்றல் லேசர் துடிப்பு ஒரு பாறை அல்லது மண் போன்ற ஒரு பொருளின் மேற்பரப்பில் கவனம் செலுத்துகிறது என்று தேசிய விண்வெளி நிறுவனம் கூறியது. லேசர் துடிப்பு மிகவும் வெப்பமான மற்றும் உள்ளூர் மயமாக்கப்பட்ட பிளாஸ்மாவை உருவாக்குகிறது. சேகரிக்கப்பட்ட பிளாஸ்மா ஒளியானது ஸ்பெக்ட்ரலில் தீர்க்கப்பட்டு, சார்ஜ் கப்பிடு டிவைசஸ் போன்ற டிடெக்டர்களால் கண்டறியப்படுகிறது.

ஒவ்வொரு தனிமமும் பிளாஸ்மா நிலையில் இருக்கும்போது ஒளியின் அலைநீளங்களின் சிறப்பியல்பு தொகுப்பை வெளியிடுவதால், பொருளின் தனிம கலவை தீர்மானிக்கப்படுகிறது என்று இஸ்ரோ கூறியுள்ளது. திங்களன்று பிரக்யான் ரோவர் சந்திரனின் மேற்பரப்பில் அதன் இருப்பிடத்திற்கு சற்று முன்னதாக நான்கு மீட்டர் விட்டம் கொண்ட பள்ளத்தை எதிர்கொண்டது. அதன் பிறகு அதன் பாதையை திரும்பப் பெறுமாறு கட்டளையிடப்பட்டது.

ரோவர் பாதையைத் திரும்பப் பெறுமாறு கட்டளையிடப்பட்டதை இஸ்ரோ ட்விட்டரில் பகிர்ந்து கொண்டது. ‘விக்ரம் லேண்டர்’ கப்பலில் சந்திராவின் மேற்பரப்பு தெர்மோபிசிகல் பரிசோதனை (சாஸ்டே) பேலோடில் இருந்து இந்திய விண்வெளி நிறுவனம் தங்கள் முதல் கண்காணிப்பை வெளியிட்ட பிறகு இது நடந்தது. சந்திரனின் மேற்பரப்பின் வெப்ப நடத்தையைப் புரிந்துகொள்வதற்காக துருவத்தைச் சுற்றியுள்ள நிலவின் மேல்மண்ணின் வெப்பநிலை விவரத்தை அளவிடுவது ChaSTE (சந்திராவின் மேற்பரப்பு தெர்மோபிசிகல் பரிசோதனை) மூலம் நடத்தப்படுகிறது.

சூரியப் பயணம்

நிலவின் மீதான வெற்றிப் பயணத்தை தொடர்ந்து இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகம் சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதற்காக அனுப்பப்படும் `ஆதித்யா எல்1’ விண்கலத்தின் ஏவுதலுக்கான ஒத்திகையும் ஸ்ரீஹரிகோட்டாவில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

செவ்வாய், நிலவைத் தொடர்ந்து சூரியனின் வெளிப்புறப்பகுதியை ஆராய்வதில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தீவிரம் காட்டுகிறது. இதற்காக ஆதித்யா எல்1 என்ற அதிநவீன விண்கலத்தை விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.

இதில், சோலார் அல்ட்ராவைலட் இமேஜிங் டெலஸ்கோப், பிளாஸ்மா அனலைசர், எக்ஸ்ரே ஸ்பெக்ஸ்ட்ரோ மீட்டர் உள்ளிட்ட சாதனங்கள் இடம்பெற்றுள்ளன.

சூரியனை ஆய்வு செய்வதற்காக இந்தியா அனுப்பும் முதல் விண்கலமான ஆதித்யா எல்1, 1,475 கிலோ எடை கொண்டது. பூமியில் இருந்து சுமார் 15 லட்சம் கி.மீ. தொலைவில் உள்ள ‘லாக்ராஞ்சியன் பாயின்ட் ஒன்’ என்ற பகுதியில் விண்கலம் நிலைநிறுத்தப்பட உள்ளது.

இங்குதான் சூரியனுக்கும், பூமிக்கும் இடையேயான ஈர்ப்பு விசை சரிசமமாக இருக்கும். எனவே, அங்கிருந்தபடி சூரியனின் வெளிப்புறப் பகுதி வெப்பச் சூழல், கதிர்வீச்சு, காந்தப்புலம் உள்ளிட்டவை குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

ஆதித்யா விண்கலம், பிஎஸ்எல்வி சி57 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து செப். 2ம் தேதி காலை 11.50 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இதற்கான இறுதிக்கட்டப் பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே, விண்கலத்தை ஏவுவதற்கான ஒத்திகை வெற்றிகரமாக நடத்தப்பட்டு, ராக்கெட்டில் எரிபொருள் நிரப்புதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சூரியன் குறித்த ஆராய்ச்சிக்கு இதுவரை அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு ஆகியவை மட்டுமே விண்கலங்களை அனுப்பியுள்ளன. இந்த திட்டம் வெற்றி பெற்றால், அந்த வரிசையில் இந்திய 4வது இடத்தைப் பெறும்.

வான் இயற்பியல் ஆராய்ச்சி மையம், வானியல் மற்றும் விண்வெளி இயற்பியல் பல்கலைக்கழக மையம், இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகம் ஆகியவை இந்த விண்கல வடிவமைப்பில் முக்கியப் பங்காற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. சூரிய

ஆய்வுக்கான ஆதித்யா எல்1 விண்கலம் திட்ட இயக்குநராகவும், தமிழகத்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானி நிகர் சாஜி செயல்பட்டு வருகிறார்.

ஆதித்யா எல்1 விண்கலத்தில் உள்ள விஇஎல்சி என்ற தொலைநோக்கி, சூரியனின் ஒளி, நிற மண்டலம், வெளிப்புற அடுக்குகள், வெடிப்புச் சிதறல் தொடர்பாக ஆய்வுமேற்கொள்கிறது.இதைபெங்களூருவில் உள்ள வான் இயற்பியல் ஆய்வு மையம் வடிவமைத்துள்ளது. இந்தக் குழுவில், மதுரை பேராசிரியர் ரமேஷ் பணியாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

1947இல் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு விவசாயம், தொழில் துறை, உள்கட்டமைப்பு திட்டங்கள் போன்றவற்றில் இந்தியா கவனம் செலுத்தியது. அதாவது அமெரிக்காவும், ரஷ்யாவும் விண்வெளித் துறையில் போட்டி போட்டு ஆய்வுகளை மேற்கொண்டிருந்த ஆரம்ப காலத்தில், இந்தியா இந்தத் துறையில் அவ்வளவாக கவனம் செலுத்தவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இந்தக் குறையைப் போக்கும் விதத்தில், 1962இல் விண்வெளி ஆய்வுக்கான இந்திய தேசியக் குழு உருவாக்கப்பட்டது. விக்ரம் சாராபாய், அப்துல் கலாம் போன்றவர்கள் இக்குழுவின் ஆரம்பக் கால உறுப்பினர்களாக அங்கம் வகித்தனர்.

இதன் தொடர்ச்சியாக, 1969இல், விண்வெளி ஆய்வுக்கான தேசியக் குழு, இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமாக (ISRO) மாற்றப்பட்டது.

தொடர்ந்து, 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியாவில் செயற்கைக்கோள் தயாரிப்பு துறை வளர்ச்சி அடைந்ததற்கான அடையாளமாக உணரப்பட்டுள்ளது.

மற்றும், இந்திய விண்வெளிப் பொருளாதாரத்தில், 2025ஆம் ஆண்டுக்குள் செயற்கைக்கோள் துறை வேகமான வளர்ச்சியைப் பெறும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

பாரதியாரின் "சந்திர மண்டலத்தில் கண்டு தெளிவோம்" கூற்றுப்படி ஒட்டுமொத்த இந்திய விஞ்ஞானிகளின் கூட்டு முயற்சியால் இன்று நமக்கு வானம் வசப்பட்டு இருக்கிறது.

இந்திய விஞ்ஞானிகளின் இந்த விண்வெளித் துறை ஆராய்ச்சி மேலும் பல உச்சத்தை தொட "அரசியல் சூரியன் மாத இதழ்" தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகிறது.

# இறந்த இன்ஸ்பெக்டர் உடலுக்கு 21 குண்டுகள் முழங்க இறுதி மரியாதை

கோவை மாவட்டம் சிறுமுகை பழத்தோட்டம் பகுதியை சேர்ந்தவர் ரமேஷ் கண்ணா (50). இவருக்கு மனைவி மற்றும் ஒரு மகன், மகள் உள்ளனர்.

ரமேஷ் கண்ணா திருவாரூர் மாவட்டம் பரவக் கோட்டை போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணி புரிந்து வந்தார்.

இந்நிலையில் இவர் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு உடல்நிலை சரியில்லாமல் சிறுமுகை பழத்தோட்டத்தில் உள்ள தனது சொந்த வீடு மற்றும் பகுத்தம்பாளையத்தில் உள்ள தனது தாய் வீட்டில் இருந்து வந்தார்.

அதைத்தொடர்ந்து ரமேஷ் கண்ணா நெஞ்சுவலி ஏற்பட்டு மரணம் அடைந்துள்ளார். இதனையடுத்து மறைந்த இன்ஸ்பெக்டர் ரமேஷ் கண்ணா உடலுக்கு



இறுதி மரியாதை காவல் துறையின் சார்பில் சத்திய மங்கலம் மின் மயானத்தில் 21 குண்டுகள் முழங்க போலீசார் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் போலீஸ் துணை சூப்பிரண்டு ஜமன் ஜமால் உள்பட போலீசார் இறுதி மரியாதை செலுத்தினர்.

# ஆழியாறு அணைக்கு சுற்றுலா பயணிகள் வருகை குறைந்தது

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அடுத்த ஆழியாறு பகுதியில் பெரிய அணைக்கட்டு உள்ளது. இங்கு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் எழில்மிகு பூங்கா மற்றும் படகு சவாரி ஆகியவை அமைக்கப்பட்டு உள்ளன. எனவே கோவை மட்டுமின்றி பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் சுற்றுலாப்பயணிகள் ஆழியாறு அணைக் கட்டுக்கு வந்திருந்து, அங்கு உள்ள பூங்காவில் பொழுதுபோக்குவதுடன், அணைக்கட்டு பகுதியில் படகு சவாரி சென்றும் மகிழ்ந்து வருகின்றனர். அதிலும் குறிப்பாக விடுமுறை காலங்களில் ஆழியாறு அணையில் சுற்றுலா பபணிகள் கூட்டம் அலை மோதும். பொள்ளாச்சி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 2 வாரங்களாக மழை பெய்யவில்லை. இதனால் அங்கு உள்ள பல்வேறு பகுதியில் கடும் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. எனவே ஆழியாறு அணையை சுற்றி பார்க்க வரும் பயணிகள் குடை பிடித்துக்கொண்டு தான் செல்ல வேண்டி உள்ளது. ஆழியாறு பகுதியில் வெயில் கொளுத்துவதால் அங்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து உள்ளது. கடந்த ஆண்டு இதே மாதத்தில் அணைக் கட்டுக்கு தினமும் வந்து செல்வோரின் எண்ணிக்கை சுமார் 2 ஆயிரம் என்ற நிலையில் இருந்தது. ஆனால் தற்போது நாள்தோறும் 300க்கும் குறைவான எண்ணிக்கையில் தான் பொதுமக்கள் வந்து செல்கின்றனர். எனவே ஆழியாறு அணைக் கட்டு பகுதியில் உள்ள பூங்கா வெறிச்சோடி காணப்படுகிறது. மேலும் சுற்றுலா பயணி களின் வரத்து குறைவு காரணமாக அணைக்கட்டு பகுதியில் படகு சவாரியும் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டு உள்ளது. இதனால் அங்கு வரும் பொதுமக்கள் சற்று ஏமாற்றம் அடைந்து உள்ளனர். இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், ஆழியாறு அணைக்கட்டு பகுதியில் வெயிலின் தாக்கம் அதிக மாக உள்ளது. எனவே சுற்றுலா பபணிகளின் வருகை குறைந்து உள்ளது. பொள்ளாச்சி பகுதியில் மழை பெய்து மீண்டும் குளுமை திரும்பினால் ஆழியாறு அணைக்கு வரும் சுற்றுலா பபணிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்து உள்ளனர்.

# பசுமையாக காட்சி அளிக்கும் தாளவாடி-பர்கூர் வனப்பகுதிகள்

ஈரோடு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மாவட்டத்தின் அனைத்து பகுதிக ளிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. ஒரு சில இடங்களில் சூறாவளி காற் றுடன் பலத்த மழை பெய்து வருகிறது. பகல் நேரங்களில் வெயி லின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டாலும் மாலை மற்றும் இரவு நேரங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. அதே போல் மாவட்டத்தில் உள்ள வன ப்பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. சத்தியமங்கலம் அடுத்த பண்ணாரி, தாளவாடி, ஆச னூர் உட்பட்ட வனப்பகுதி களில் பரவ லாக மழை பெய்தது.

இதனால் வனப்பகுதி முழுவதும் பசுமையாக காட்சி அளித்து வருகிறது. தாளவாடி வனப்பகுதியில் எங்கு பார்த்தாலும் பசுமையை காண முடிகிறது. இதே போல் அந்தியூர் அருகே மைசூர் செல்லும் வழியில் பர்கூர் மலைப்பகுதி அமைந்துள்ளது.

இந்த மலைப்பகுதியின் இரு புறங்களிலும் மரங்கள், செடி, கொடிகள் மீது மழை துளிகள் படர்ந்து பசுமை யாக காட்சி அளித்து வருகிறது. மலைப்பகுதிகளில் குளிர்ந்த காற்று வீசி வருகிறது. இதனால் இந்த வழியாக செல்லும் பொதுமக்கள் ஒரு வித மகிழ்ச்சியுடன் சென்று வருகிறார்கள். மேலும் இந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் வாகனங்களை நிறுத்தி இயற்கை அழகை ரசித்து விட்டு செல்கிறார்கள்.

# ஒரே நாடு ஒரே தேர்தல் சாத்தியமா?
## அரசியல் சூரியன் *Special* ரிப்போர்ட்

சமீபத்தில், தலைமைத் தேர்தல் ஆணையர், 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்ற யோசனையை ஆதரித்ததோடு ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவதற்கு முழுமையாக தயாராக இருப்பதாகவும் கூறினார்.

'ஒரே நாடு ஒரே தேர்தல்' முறையைப் பற்றி கொஞ்சம் பார்ப்போம்.

நாட்டின் தற்போதைய மாநில தேர்தல் முறையானது மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளுக்கு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்படுகிறது. அதாவது கீழ்சபை அல்லது மாநில அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிவடையும் போது அல்லது அவைகளில் ஏதேனும் ஒன்று முன்கூட்டியே கலைக்கப்படும்.



மாநில சட்டசபைகளின் பதவிக்காலம் ஒன்றுக்கொன்று அல்லது மக்களவையின் கால அவகாசம் அவசியமாக இருக்காது.

இதன் விளைவாக, தேசிய அளவில் ஆண்டு முழுவதும் தேர்தல் நடத்தும் மிகப்பெரிய பணி நடக்கிறது.

ஒரே தேசம் ஒரே தேர்தல் என்பது அனைத்து மாநிலங்களுக்கும், மக்களவைக்கும் ஒரே நேரத்தில் ஐந்தாண்டு இடைவெளியில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று முன்மொழிகிறது.

இது மாநிலங்களுக்கும் மையத்திற்கும் தேர்தல்கள் ஒத்திசைக்கும் வகையில் இந்திய தேர்தல் சுழற்சியை மறுசீரமைப்பதை உள்ளடக்கும்.

இதன் அர்த்தம் வாக்காளர்கள் லோக்சபா மற்றும் மாநில சட்டசபைகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரே நாளில், அதே நேரத்தில் (அல்லது ஒரு கட்டம் கட்டமாக) வாக்களிப்பார்கள்.

மாநிலங்களுக்கும், மக்களவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது என்பது ஒன்றும் புதிதல்ல.

உண்மையில், இந்தியாவில் இதற்கு முன்பு 1952, 1957, 1962 மற்றும் 1967 ஆகிய ஆண்டுகளில் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டது.

1968 – 69 க்கு இடையில் சில சட்டப் பேரவைகள் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த விதிமுறை நிறுத்தப்பட்டது.

அப்போதிருந்து, இந்திய தேர்தல் முறையானது மத்திய மற்றும் மாநிலங்களுக்கு தனித்தனியாக தேர்தல்களை நடத்துகிறது.

1983 ஆம் ஆண்டு ஆர்.கே.திரிவேதி அவர்கள் இந்திய தேர்தல் ஆணைய தலைவர் ஆக இருக்கும் பொழுது தேர்தல் ஆணையத்தின் ஆண்டறிக்கையில் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் யோசனை முன்வைக்கப்பட்டது. மீண்டும் 1999 ஆம் ஆண்டு சட்ட ஆணையத்தின் அறிக்கையும் இதைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

பாஜக அரசு, 2014ல் ஆட்சிக்கு வந்த பிறகு, நாட்டில் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என்ற வலுவான கருத்தை முன்வைத்தது.

2018 ஆம் ஆண்டு, சட்ட ஆணையம் ஒரே நேரத்தில் தேர்தல்களை செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்து ஒரு வரைவு அறிக்கையை சமர்ப்பித்தது,

ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பான சம மற்றும் அரசியலமைப்பு கட்டுப்பாடுகள் மற்றும் தீர்வுகளை இது ஆய்வு செய்தது. அரசியலமைப்புச் சட்டத்திற்கு உரிய திருத்தங்கள் மூலம் மட்டுமே ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த முடியும் என்று சட்ட ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

குறைந்தபட்சம் 50% மாநிலங்கள் அரசியலமைப்பு திருத்தங்களை அங்கீகரிக்க வேண்டும் என்று

ஆணையம் மேலும் கருத்து தெரிவித்துள்ளது.

ஒரே நேரத்தில் வாக்கெடுப்பு நடத்துவதற்கு, தேர்தல் முறை மாற்றம் தொடர்பாக அரசியல் ஒருமித்த கருத்து இருக்க வேண்டும். மேலும், அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் வகுக்கப்பட வேண்டும்.

'ஒருதேசம்ஒரேதேர்தல்'நடைமுறைப்படுத்துவதற்குத் திருத்தப்பட வேண்டிய முக்கியமான சில விதிகள்:

சட்டப்பிரிவு 172 மற்றும் பிரிவு 83 ஆகியவை பாராளுமன்றத்தின் சபைகளின் கால அளவைக் கையாளுகின்றன, மேலும் அவை விரைவில் கலைக்கப்படாவிட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மற்றும் மாநில சட்டசபைகள் இரண்டிற்கும் ஐந்தாண்டு காலத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படுகின்றன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 85வது பிரிவு, ஆறு மாதங்கள் மிகாமல், நாடாளுமன்றக் கூட்டங் களைக் கூட்டுவதற்கான குடியரசுத் தலைவரின் அதிகாரங்களைப் பற்றிக் கூறுகிறது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் ஒத்திவைக்கவும், மக்களவையை கலைக்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 356வது பிரிவு, ஒரு மாநிலத்தில் ஆட்சி மற்றும் அரசியலமைப்புத் தோல்வி ஏற்பட்டால் நடைமுறைக்கு வந்து குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கையாள்கிறது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 (RPA சட்டம் 1951) மற்றும் லோக்சபா மற்றும் மாநில சட்டசபைகள் இரண்டிலும் ஒழுங்கமைக்கப்பட்ட நடத்தை மற்றும் ஸ்திரத்தன்மைக்காக, கட்சி விலகல் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

ஒரே நேரத்தில் தேர்தல் என்பது எதிர்காலத்தில் பிராந்தியங்களுக்கு இடையிலான கட்சிகளுக்கு சவாலாக அல்லது ஆபத்தான நிலையை ஏற்படுத்தக் கூடும் என்று சிலர் ஊகிப்பதாக தெரிய வருகிறது.

வெவ்வேறு நேரங்களில் பல தேர்தல்கள் நடைபெறுவதால் இதற்காக செலவழிக்கும் நேரம், உழைப்பு மற்றும் நிதிச் செலவுகள் ஆகியவற்றின் மூலம் அரசு கருவூலத்திற்கு பெரும் செலவை ஏற்படுத்துகிறது.

தேர்தல் நடக்கும் வேலைகளில் பாதுகாப்பு காரணங்களுக்கான பணியாளர்கள் அதற்கான கட்டமைப்புகள் தேர்தலை ஒட்டிய சமூக குழுவின ரிடையே உருவாகும் கலவரங்கள், கலவர சூழ்நிலைகள் ஆகியவற்றை கட்டுப்படுத்துதல், இந்த காரணிகளுக்கான காரணங்களை முன்கூட்டியே குறுகிய காலத்தில் கண்டறிவதில் ஏற்படும் சிக்கல்கள் போன்றவற்றை கவனத்தில் கொள்வது அவசியமா கிறது. காலப்போக்கில் இது ஒரு கூட்டாட்சி தத்துவத்தையே கேள்விக்குறியாக்கும் சூழ்நிலை கூட பொதுமக்களிடையே ஏற்படுத்த வாய்ப்புகள் இருக்கின்றன.

அடிக்கடி நடைபெறும் தேர்தல்கள் நாடு முழுவதும் சாதி, மதம் மற்றும் வகுப்புவாதப் பிரச்சினைகளை நிலைநிறுத்துகின்றன.

அடிக்கடி நடைபெறும் தேர்தல்கள், நீண்ட கால திட்டங்கள் மற்றும் கொள்கைகளில் கவனம் செலுத்தாமல், உடனடி தேர்தல் ஆதாரங்களின் அடிப்படையில் பொதுவாக சிந்திக்க அரசியல் வர்க்கத்தை கட்டாயப்படுத்துவதால், ஆட்சி மற்றும் கொள்கை வகுப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

ஏராளமான ஆசிரியர்கள் உட்பட அரசு ஊழியர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுவதால், வழக்கமான |தேர்தல்கள் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் இடையூறு ஏற்படுகிறது.

பணம் பலம் படைத்த பெரிய கட்சிகளுடன் சிறிய கட்சிகள் சம அளவில் பிரச்சாரம் மற்றும் இன்ன பிற மறைமுக செலவுகள் ஆகியவற்றில் போட்டி போட முடியாமல் ஜனநாயக செயல்பாட்டில் சமத்துவத்தையும் தடுக்கிறது. அதே நேரத்தில் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதால், தேர்தல் செலவு குறைக்கப்படும்,

ஒரே நேரத்தில் வாக்குப்பதிவை எதிர்க்கும் கட்சிகள் மத்தியில் கவலைக்கு முதன்மையான காரணம் அரசியலமைப்புச் சட்டக் கோளாறுகள் மற்றும் கூட்டாட்சிக்கு எதிரான விளைவுகள் உண்மையாகும் பட்சத்தில் மக்களின் வாக்களிக்கும் தீர்ப்பை பாதிக்கும் என்றும் இந்த புதிய செயல்முறைக்கு மனிதவளம் மற்றும் இயந்திரங்கள் (EVMகள் மற்றும் VVPATகள்) மிகப்பெரிய அளவில் தேவைப்படும் என்றும் சிலர் நம்புகின்றனர்.

தேசியப் பிரச்சினைகளும், மாநிலப் பிரச்சினைகளும் இயல்பிலும் நடைமுறையிலும் வேறுபட்டவை.

தேசியத் தேர்தல் தேசிய நலன்கள் பற்றிய பிரச்சினைகளால் ஆதிக்கம் செலுத்துகிறது, அதே நேரத்தில் மாநிலத் தேர்தல்கள் உள்ளூர் பிரச்சினைகளைக் கையாளுகின்றன.

ஒரே நேரத்தில் மாநில தேர்தல் நடத்தினால், தேசிய பிரச்சனைகள், மற்றும் மாநில பிரச்சனைகளை

கையாளுவதில் அல்லது ஆதிக்கம் செலுத்துவதில் குழப்பம் ஏற்பட்டு ஒட்டுமொத்த தேர்தலையே பாதிப்புக்கு உள்ளாக்கும் எனவும் அஞ்சப்படுகிறது.

வழக்கமான தேர்தல்கள் என்பது ஒரு மாநிலம் அல்லதுமற்றொன்றுதேர்தல்களில்தோல்வியடையாமல் இருக்க, மக்களின் விருப்பத்திற்கு செவிசாய்க்க வேண்டிய கடமையில் அரசாங்கம் உள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்கம் கலைக்கப்பட்டு விடும் என்ற அச்சமின்றி ஒரு நிலையான பதவிக்காலம் உறுதிசெய்யப்படும் என்பதால் ஒரு ஸ்திரமான உறுதியான கொள்கை முடிவு எடுக்க அரசுகளுக்கு வாய்ப்பாகவும் அமையக்கூடும்.

லோக்சபா மற்றும் அந்தந்த மாநில சட்டசபைகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதன் மூலமும், குறைப்பதன் மூலமும், மத்தியிலும், அனைத்து மாநிலங்களிலும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டாலும், இந்த நிலையை நீண்ட காலம் நீடிப்பது கடினம்.

எந்தவொரு அரசாங்கமும் அந்த சட்டமன்றத்தில் நம்பிக்கையை இழந்தவுடன், மீண்டும் அமைப்பு சீர்குலைந்துவிடும்.

மக்கள் தங்கள் விருப்பத்தை வாக்களிக்கும் உரிமையின் மூலம் வெளிப்படுத்தும் வகையில் வழக்கமான தேர்தல்களை வழங்குவதன் மூலம் ஜனநாயகத்தின் விருப்பத்தை நிலைநிறுத்த தற்போதைய அமைப்பு நம் முன்னோர்களால் உணர்வுப்பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும், தேர்தல் முறையை மாற்றியமைப்பது என்பது மக்கள் தங்கள் ஜனநாயக விருப்பத்தை வெளிப்படுத்தும் அதிகாரத்தை சீர்குலைப்பதாகும்.

ஒரே நேரத்தில் தேர்தல் என்பது ஒரு யோசனை, அந்த நேரம் வந்துவிட்டது. இருப்பினும், இந்த அரசியலமைப்பின் கூட்டாட்சி அமைப்புடன் தொடர்புடையது என்பதால், பிராந்தியக் கட்சிகளின் கவலைகளைத் தணிக்க அரசியல் ஸ்பெக்ட்ரம் முழுவதும் இது குறித்து முறையாக விவாதிக்கப்பட வேண்டும். இது நாட்டில் யோசனையை செயல்படுத்துவதை எளிதாக்கும்.

சிறந்த முறையில், 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' முறையானது, தேர்தலை நடத்துவதற்கு செலவிடப்படும் நேரம், ஆற்றல் மற்றும் வளங்களை குறைக்க வேண்டும். ஒரே நேரத்தில் நடத்தப்படும் கருத்துக் கணிப்புகள் காலத்தைக் குறைத்தால், அரசியல் கட்சிகளுக்கு தேசியப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், ஆட்சியை மேம்படுத்துவதற்கும் போதுமான அவகாசம் கிடைக்கும்.

இந்தியா சுதந்திரம் அடைந்த முதல் இரண்டு தசாப்தங்களில் இருந்ததைப் போலவே ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற கருத்தை மீட்டெடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக சட்ட ஆணையத்தின் பரிந்துரைகளின்படி நடுவன் அரசும் ஒரே தேர்தல் ஒரே நாடு என்ற திட்டத்திற்கு ஆலோசனை குழு அமைத்திருப்பதன் மூலம் ஒரு அடி முன்னெடுத்து வைத்திருக்கிறது.

இந்த ஆலோசனைக் குழுவுடைய பரிந்துரையின் வலிமையை பொருத்து ஒரே தேர்தல் முழக்கம் வலுப்பெறுமா? அல்லது வழுக்கி விடுமா? காத்திருப்போம்!

# சாலையோரம் நிறுத்தப்படும் வாகனங்களால் நெரிசல்

தருமபுரி மாவட்டம், அரூர் பைபாஸ் சாலையில், 4 ரோட்டிலிருந்து ரவுண்டானா வரை, கடைகள், தாலுகா ஆபீஸ், மற்றும் வங்கிகள் முன்புறம் நிறுத்தப்படும் வாகனங்களால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்கள் நினைத்த இடத்தில் வாகனங்களை நிறுத்தி விட்டு செல்கின்றனர்.

குறிப்பாக காலை நேரங்களில் கடைகளின் முன்பு நிறுத்தப்படும் வாகனங்கள் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது. மேலும் கடைக்காரர்கள் அவர்களின் இடத்தையும் தாண்டி, சாலை வரை ஆக்கிரமிப்பு செய்து பொருட்களை வைத்துள்ளனர். எனவே உரிய நடவடிக்கையை மேற்கொண்டு வாகனங்களை நிறுத்த குறிப்பிட்ட இடங்களை ஒதுக்கிடு செய்தால் மட்டுமே போக்குவரத்து நெரிசல் குறையும். எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கீரைகளை ஏற்றுமதி செய்ய முடியாமல் விவசாயிகள் கவலை

சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி பகுதி 42 ஊராட்சிகள், 417 கிராமங்களை கொண்டுள்ளது. மலைகள், குன்றுகள் ஏற்ற தாழ்வு கொண்ட நிலபரப்பான சூளகிரி பகுதியில் தென்பெண்ணையாற்றின் மூலம் கிடைக்கும் தண்ணீர் மூலமும் மற்றும் சொட்டு நீர் பாசனம் மூலமும் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக பரம்பரை விவசாயமாக கொத்தமல்லி, புதினா மற்றும் காய்கறி, பூக்கள் பயிரிடப்படுகின்றன.

இதில் சூளகிரி ஒன்றிய பகுதியான பி.எஸ்.திம்ம சந்திரம், காட்டு நாயக்கன் தொட்டி, பேரிகை, நெரிகம், சின்ரான்தொட்டி, பி.குருபரப்பள்ளி, பண்ணப்பள்ளி, கும்பளம், காலிங்காவரம், பஸ்த்தலப்பள்ளி, அத்திமுகம், வெங்கடேசபுரம், ஆலுர், மைதாண்டப்பள்ளி, செம்பரசனப்பள்ளி, சிம்புல்திராடி, பெத்தசீகரளப்பள்ளி, எ.செட்டிப்பள்ளி, அனகொண்டப்பள்ளி, மாரண்டப்பள்ளி, கானலட்டி, காமன் தொட்டி, கோனேரிப்பள்ளி, பேரண்டப்பள்ளி, புக்காசாகரம், மருதாண்டப்பள்ளி, சூளகிரி, டோரிப்பள்ளி, பீர்ஜப்பள்ளி, சானமாவு, கொம்மேபள்ளி, உத்தனப்பள்ளி, டி.குருபரப்பள்ளி, சாமனப்பள்ளி, அயர்னப்பள்ளி, தியாகசனப்பள்ளி, எனுசோனை, பங்கனஅள்ளி, ஒசஅள்ளி, சென்னப்பள்ளி, மேலுமலை, இம்மிடி நாய்க்கனப்பள்ளி, உல்லட்டி, துப்பு கானப்பள்ளி ஆகிய 42 ஊராட்சிகளில் காலம் காலமாக கொத்தமல்லி, புதினாவை நம்பியே விவசாயிகள் 1000க்கும் மேற்பட்ட ஏக்கர்களில் பயிர் செய்து வருகின்றனர்.

சுற்றுவட்டார பகுதி கிராமங்களில் பயிர் செய்த தோட்டங்களில் அறுவடை செய்த காய்கறி, பூக்கள் ஒசூர் மார்க்கெட்டுக்கு எடுத்து சென்று வியாபாரம் செய்வார்கள். கொத்தமல்லி, புதினாகளை மூட்டை, மூட்டையாக கட்டி வாகனங்களில் ஏற்றி ஒசூர் கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை ஓரமாக சூளகிரி உத்தனப்பள்ளி செல்லும் சாலையில் 50 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த கொத்தமல்லி மார்க்கெட்டுக்கு கொண்டு செல்வார்கள். இதைத்தொடர்ந்து 2006ம் ஆண்டு தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்காக அந்த இடம் அரசு கையகப்படுத்தப்பட்டது.

இதனால் சூளகிரி–உத்தனப்பள்ளி சாலையில் மார்க்கெட் இல்லாமல் 15 ஆண்டுகளாக விவசாயிகள், வியாபாரிகள் மிகவும் வருத்தத்தில் இருந்து வந்தனர்.

இதனையடுத்து கொத்தமல்லி, புதினாவுக்கு என்று விற்பனை செய்ய இடம் வேண்டும் என மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

பின்பு வட்டார வளர்ச்சி அலுவலக அதிகாரிகள் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒசூர்–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை ஓரமாக அலகுபாவி எதிரே உள்ள மலை அடிவாரத்தில் அரசு நிலத்தில் இடம் ஒதுக்கப்பட்டது. அந்த இடம் குண்டும், குழியும் உள்ளதால், வாகனங்கள் ஏதும் செல்ல முடியாமல் இருந்து வந்தது. போதிய வசதிகள் இல்லாததால், பல வியாபாரிகள் மருதாண்ட பள்ளி, பாளையம், ஒமதேப்பள்ளி என பிரிந்து சென்று பல பகுதிகளில் சாலை ஓரங்களில் ஆபத்தான நிலையில் 500க்கும் மேற்பட்ட வாகனங்களில் கொத்தமல்லி, புதினா பல ஆயிரம் டன் கணக்கில் லாரிகளில் விவசாய பொருட்களை விவசாயிகள் ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

அவ்வாறு ஏற்றுமதி செய்யப்படும் கொத்தமல்லி, புதினா வகைகள் கீரைகள் கிருஷ்ணகிரி, தருமபுரி, வேலூர், சென்னை, சேலம் உள்ளிட்ட தமிழகம் முழுவதும், கர்நாடகா, ஆந்திரா, கேரளா, மகாராஷ்டிரா பல வெளி மாநிலம், வெளிநாடு என அனைத்து பகுதிகளில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதன் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக வருவாய் ஈட்டக்கூடிய ஒரு பகுதியாக சூளகிரி அமைந்துள்ளது.

கொத்தமல்லி, புதினா ஏற்றுமதி செய்வதற்காக சூளகிரி பகுதியில் அரசு தானாக முன்வந்து 6 ஏக்கரில் நவீன கட்டிடம், சிமெண்ட் சாலை, வாகன நிறுத்துவதற்கான இடவசதிகள், கழிப்பிடம், சி.சி.டி.வி. கேமரா, மின்விளக்கு, குளிர்பதன கிடங்கு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு நவீன மயமாக்கப்பட்ட மார்க்கெட்டு ஒன்றை அமைத்து தரவேண்டும் என்று சூளகிரி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மாமல்லபுரம் சிற்பங்கள் பாழாகும் காரணங்கள்...!

சென்னையில் இருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ளது மாமல்லபுரம். தமிழ்நாட்டின் சிற்பக்களஞ்சியம் எனப்படும் மாமல்லபுரத்துக்கு உள்நாடு மட்டுமின்றி வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் அதிக அளவில் வருகின்றனர். இங்கு குகை கோவில்கள், சிற்பங்கள் அமைந்துள்ளன.

இவை உலக பிரசித்திபெற்று திகழ்கிறது. பல்லவர் கால சிற்பங்கள் பார்க்க பரவச மூட்டும் வகையில் அமைந்து உள்ளன. யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட கிருஷ்ண மண்டபம் என அழைக்கப்படும் பாறை குடை சிற்பம் மாமல்லபுரத்தில் தலசயனப் பெருமாள் கோவிலுக்கு பின்புறத்தில் அமைந்துள்ளது.

இந்த சிற்பம் பெரிய பாறையில் குடைந்து உருவாக்கப்பட்டதாகும். இந்த குடைவரை சிற்ப வளாகத்தில் உள்ளே இருக்கும் பாறையில் கிருஷ்ணர் பசுவின் மடியில் பால்கறப்பது போன்றும், அவரது குறும்புத்தனம், லீலைகள் குறித்து சிற்பங்களாக செதுக்கி வைக்கப்பட்டு உள்ளன.

சுற்றுலா பயணிகளை கவரும் கிருஷ்ணரின் வெண்ணை பந்து எனப்படும் கருங்கல் பிரமாண்டமாக அமைந்துள்ளது. அர்ஜுனன் தபசு பகுதியில் 2 யானைகள் உள்பட பல சிற்பங்கள் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட நிலையில் உள்ளன. அருங்காட்சியகம், கலங்கரை விளக்கம், ஐந்து ரதம், கடற்கரை கோவில் என மாமல்லபுரத்தில் ஒருநாள் முழுவதும் இருந்து பார்த்து ரசிக்கும் இடங்கள் உள்ளன.

கடற்கரையில் இருக்கும் இந்த சிற்பங்கள் கடல் காற்றினால் சேதம் அடைகின்றன. காற்றின் மூலம் உப்புத்துகள்கள் பரவி சிற்பங்களின் மேல் பட்டு அரிப்பதால் சிற்பங்களின் நுட்பமான வேலைப்பாடுகள் வெளியில் தெரியாமல் பாதிக்கின்றன. உப்பு அரித்த இடங்களில் சிறு சிறு துளைகள் ஏற்பட்டு மழைநீர் மற்றும் அசுத்தங்கள் சேர்ந்து பாதிப்பை அதிகமாக்குகின்றன.



தூசிகள் சிற்பங்கள் முழுவதும் பரவி சிற்ப வளாக பகுதிகளை பாதிப்படைய செய்கிறது. அதேபோல் காக்கை, குருவி, குரங்கு போன்றவற்றின் எச்சங்கள் மூலமாகவும் ஒருபுறம் பாதிப்பு ஏற்படுகிறது. இந்த பாதிப்பை தவிர்க்க தொல்பொருள் ஆய்வுத்துறை ஆண்டுக்கு ஒருமுறை ரசாயன கலவை கலந்த தண்ணீர் மூலம் சுத்தம் செய்து உப்பு படிமங்களை அகற்றி வருகிறது.

என்றாலும் பாதிப்புகளை முழுமையாக சரிசெய்ய இயலாத நிலைதான் உள்ளது. இன்றைய நவீன தொழில்நுட்ப காலத்தில் சிற்பங்களை அதன் தன்மை மாறாமல் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். இதுபற்றி தொல்லியல் ஆர்வலர்கள் கூறியதாவது: கடல் உப்புகள் மற்றும் மணல் நிறைந்த காற்று ஆகியவை கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ள வரலாற்று கட்டிடங்களுக்கு இயற்கை மாசுபாட்டிற்கான நிரந்தர காரணங்களாகும். மாமல்லபுரம் சிற்பங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவை. நம் முன்னோர் விட்டுச்சென்ற வரலாற்று பொக்கிஷங்களான இவற்றை நம் எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாத்து வைக்க வேண்டியது நமது கடமை. எனவே இன்னும் கூடுதல் அக்கறை எடுத்து சிற்பங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.


**விளம்பர கட்டணம்**

| விவரம் | பின்பக்க அட்டை வண்ணம் | உள் அட்டை வண்ணம் | இதழ் உள்ளே கருப்பு வெள்ளை |
|---|---|---|---|
| முழு பக்கம் | ரூ.20,000 | ரூ.15,000 | ரூ.5,000 |
| அரை பக்கம் | ரூ.10,000 | ரூ.7,500 | ரூ.2,500 |



# 10 Important Things About One Country One Election's

In the country till 1967 elections to all state assemblies were held along with the Lok Sabha elections. After 1968, the dissolution of some state assemblies made single elections impossible in later times.

The Election Commission of India in 1983 and the Law Commission in 1999 recommended that all state assembly elections be held along with Lok Sabha elections. But not implemented.

Elections to Lok Sabha and State Assemblies are held at different intervals. The central feature of 'One Nation One Election' is to change this and hold simultaneous elections for the Lok Sabha and the state assemblies.

60,000 crores have been spent for the 2019 Lok Sabha elections alone. Another point of view is that by holding elections to the Lok Sabha and Assemblies simultaneously, the cost of elections will be greatly reduced.

As Lok Sabha and Assemblies conduct different elections every term, the government officials have to be more involved in the election work. When there is only one election in one country, it becomes a situation where the election work has to be done only once in 5 years.

When the slogan of one country, one election is implemented, the welfare schemes of the central and state governments will be implemented without any delay. It is also an argument that when elections are held in some states, it becomes impossible to announce and implement some welfare schemes.

Before implementing simultaneous elections to all state assemblies, a constitutional amendment with uniform tenure of all assemblies in the country should be brought first.


If the Assembly elections are held along with the Lok Sabha elections, national issues will be given priority; There is also a risk that the problems faced by each district in the states will be pushed back.

There is also a fear that when state elections are held along with Lok Sabha elections, state parties ill not be able to undertake election expenses as much as national parties.

The fear of most parties is that this route will lead to a presidential-single-rule system in the country when the Lok Sabha and Assembly elections are held simultaneously.

Owned, Published & Printed by **K.MANIKANDAN** on Behalf of: M/s. Arasiyal Suriyan Monthly,
Printed At **SEAMAN GRAPHICS** No.7/253, KVN Puram, 2nd Street, Kilpauk Garden, Chennai-600 010.
and published from: 98/1, Vijayamangalam Road, Hospital Road, Uttukuli, Tiruppur-638751.
Editor: **K.MANIKANDAN**, Mobile:90253 05909. Mail ID: arasiyalsuriyan77@gmail.com

# ஆதித்யா எல்-1




இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) சூரியனை ஆராய்ச்சி செய்யும் தனது முதல் விண்வெளித் திட்டமான ஆதித்யாஎல்1 விண்கலத்தை செப்டம்பர் 2/2023 காலை சுமார் 11.56 க்கு ஸ்ரீஹரிகோட்டாவில் இருக்கும் சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து பிஎஸ்எல்வி எக்ஸ் எல் ராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் சீறி சூரியனை நோக்கி பறக்க ஆரம்பித்தது.

இது, சூரியனின் வெளிமட்டப் பகுதியான 'சோலார் கொரோனா' எனப்படும் சூரியனைச் சுற்றியுள்ள மண்டலத்தில் நிகழும் இயற்பியல் மற்றும் வானியல் நிகழ்வுகளை ஆய்வு செய்யும்.

இந்த விண்கலம் ஏழு கருவிகளைச் சுமந்து செல்லும். அவைசூரியனின்சுற்றுப்புறத்தில்இருக்கும்மின்காந்தம் மற்றும் அணுத்துகல்கள் புலங்களை ஆய்வு செய்யும்..

ஆதித்யா எல் 1 ஆய்வு செய்ய பயணப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் ஏற்கனவே நாம் அறிந்திருந்தாலும் சூரியனைப் பற்றிய சில அடிப்படைத் தகவல்கள்:

நமது சூரிய குடும்பத்தின் மத்தியில் இருக்கும் இந்த நட்சத்திரமான சூரிய நட்சத்திரத்திற்கு சுமார் 450 கோடி ஆண்டுகள் வயதாகிறது.

சூரியனின் சராசரி விட்டம் சுமார் 14 லட்சம் கிலோமீட்டர். இது பூமியின் விட்டத்தைவிட 109 மடங்கு பெரியது. சூரியனின் முழு கொள்ளளவை நிரப்புவதற்கு 13 லட்சம் பூமிகள் பிடிக்கும். சூரியன் பூமியிலிருந்து 15 கோடி கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் வாயுக்களால் ஆன சூரியனின் மேற்பரப்பு 10,000 டிகிரி ஃபாரன்ஹைட் அளவுக்கு வெப்பமானது.

இதுவரை நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளிக் கழகம் ஆகிய நிறுவனங்கள் விண்ணில் செலுத்தியிருக்கும் விண்கலன்கள் ஏற்கெனவே சூரியனை ஆய்வு செய்து வருகின்றன. நாசாவின் Parker Solar Probe, Solar Dynamics Observatory, மற்றும் STEREO போன்றவை சூரியனை ஆய்வு செய்து வருகின்றன. ஐரோப்பிய விண்வெளிக் கழகத்தின் Solar Orbiter, Solar and Heliospheric Observatory ஆகிய விண்கலன்கள் சூரியனை நெருக்கமாக ஆய்வு செய்து வருகின்றன. கடந்த 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாசா விண்ணில் செலுத்திய 'Parker Solar Probe' என்ற விண்கலம்தான் இதுவரை சூரியனுக்கு மிக அருகில் சென்றது. இது சூரியனை 62 லட்சம் கி.மீ தூரத்தில் இருந்து ஆய்வு செய்தது.

சூரியனின் அதீத வெப்பத்தில் இருந்து காத்துக்கொள்ள இந்த விண்கலம் 11.4 சென்டிமீட்டர் தடுப்புக் கவசத்தால் மூடப்பட்டிருந்தது. இது 2,500 டிகிரி ஃபாரன்ஹைட் வெப்பத்தைத் தாக்குப்பிடிக்கும்.

ஆதித்யாஎல்1 சூரியனைச் சுற்றியுள்ள மண்டலத்தில் நிகழும் இயற்பியல் மற்றும் வானியல் நிகழ்வுகளை ஆய்வு செய்யும்

இந்தியா அனுப்பவிருக்கும் ஆதித்யா எல்1 விண்கலம் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் இருக்கும் எல்1 என்ற புள்ளியில் இருந்து சூரியனைக் கண்காணித்து ஆய்வுகளை மேற்கொள்ளும். இரண்டு கோள்களுக்கு இடையிலுள்ள ஈர்ப்பு விசை, அவற்றின் மைய விலக்கு விசைக்குச் சமமாக இருக்கும் புள்ளிகளே லக்ராஞ்ஜ் புள்ளிகள் எனப்படும். இந்தப் புள்ளிகளில் விண்கலங்கள் குறைந்த எரிவாயுவைச் செலவிட்டு, ஸ்திரமான நிலையில் இருக்க முடியும். எந்த 2 கோள்களுக்கும் 5 லக்ராஞ்ஜ் புள்ளிகள் இருக்கும். இதில் ஒரு புள்ளி அவ்விரண்டு கோள்களுக்கும் இடையில்இருக்கும்.பூமிக்கும்சூரியனுக்கும்இடையில் இருக்கும் எல்1 என்ற புள்ளி சூரியனை ஆய்வு செய்வதற்கு எந்தத் தடைகளுமற்ற சிறந்த புள்ளியாகக் கருதப்படுகிறது.

இந்த எல்1 புள்ளி பூமியிலிருந்து 15 லட்சம் கி.மீ தொலைவில் இருக்கிறது. ஆனால், இந்த L1, L2 புள்ளி களின் கச்சிதமான அமைவிடம் ஸ்திரமற்றவை. அவை 23 நாட்களுக்கு ஒருமுறை மாறிக்கொண்டே இருக்கும். இதனால் இந்த இடத்தில் இருந்து இயங்கும் விண்கலன்களும் தங்கள் நிலையை மாற்றிக்கொண்டே இருக்க வேண்டும்.

இஸ்ரோவின் தலைவரான சோம்நாத் மற்றும் ஆதித்யா எல் 1 திட்டத்தின் தலைவரான தமிழகத்தைச் சேர்ந்த நிகர் ஷாஜி (Nigar Shaji) ஆகியோரின் வெற்றி கூட்டணி சென்ற வாரம் சாதித்த சந்திரயான் 3 போல் புதிய வரலாறு படைக்கப் போகும் அந்த நாளை எதிர்நோக்கி காத்திருப்போம்!

Arasiyal Suriyan, Tamil, English Monthly Registed with the Registar of Newspapers for India.
SEPTEMBER 2023. RNI No: TNBIL/2022/83024. Date of Publicaton : Every Month First Week

அரசியல்
# சூரியன்
நியூஸ்




24 X 7 உள்ளூர் செய்தி முதல்
உலக செய்திகள் வரை
அனல் பறக்கும்
அரசியல் மற்றும் புலனாய்வு
செய்திகள்

**www.arasiyalsuriyan.com**

தமிழகம் முழுவதும்
நிருபர்கள் தேவை

தொடர்புக்கு: **90253 05909**